மன்றம்

ஆசிரியர்:
இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

15 – 11 – 56

★

அறை 4

★



படாடோபத்திற்குப் பணியாமை

நீதிக்கட்சியினர் கோலோச்சிய அந்த நாட்களில், நீதிக்கட்சி தலைவர்கள் மக்களோடு மக்களாய்ப் பழகும் எளியவாழ்வை ஏற்படுத்திக்கொள்ளாமல், பிறர்கண்டு தங்களை மதிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் மிக்க ஆடம்பரமான முறைகளை விரும்பி மேற்கொண்டிருந்தனர். நீதிக்கட்சி நாளடைவில் செல்வாக்கு அற்றுப்போனதற்கு அதுவும் ஒரு காரணம் என்றுதான் சொல்லவேண்டும்.

நீதிக்கட்சித் தலைவர்களான பொப்பிலி அரசர், சர் கே. வி. ரெட்டி, ஏ. இராமசாமி முதலியார், ஆர். கே. சண்முகம் செட்டியார், குமார இராசா முத்தையா செட்டியார் போன்றவர்கள் சென்னையைவிட்டு எப்பொழுது வெளியூருக்குக் கிளம்பினாலும், வெளியூரிலிருந்து சென்னைக்கு எப்பொழுது திரும்பினாலும் கட்சியின் பிற தலைவர்களும், தொண்டர்களும், நண்பர்களும் புகைவண்டி நிலையத்திற்குச் சென்று, செல்லும் தலைவர்களுக்கு மாலை சூட்டி வழியனுப்புவதும், வரும் தலைவர்களுக்கு மாலையணிந்து வரவேற்பதும் அக்காலத்தில் கையாண்ட ஆடம்பரங்களிலே ஒருவகையைச் சார்ந்தனவாகும்.

இந்த முறை பெரியார் அவர்கள் நீதிக்கட்சித்தலைவர் பதவி ஏற்ற சிறிது நாட்கள் வரையிலும் கூட நடைபெற்றது. சேலம் மாநாட்டிற்குச் சிறிது நாட்களுக்கு முன்பு பெரியார் அவர்கள் சென்னை வந்துவிட்டு, மத்திய புகைவண்டி நிலையத்திலிருந்து (சென்ட்ரல் ஸ்டேஷன்) ஈரோட்டுக்குப் புறப்பட்டார்கள். அப்பொழுது வழக்கப்படி பெரியாரை வழியனுப்பக் குமார ராசா முத்தையா செட்டியார் போன்ற பலரும் புகைவண்டி நிலையத்திற்கு வந்திருந்தார்கள். அறிஞர் அண்ணா அவர்களும் பெரியாரைப் பார்த்துவிட்டு வழியனுப்பிவைக்க வந்திருந்தார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் பெரியார் அருகில் நின்று ஏதோ உரையாடிக் கொண்டிருக்கும்போது, அப்பால் நின்று வேறு யாரோடோ பேசிக்கொண்டிருந்துவிட்டுத் திரும்பிய குமார ராசா அவர்கள், அண்ணா அவர்களிடம் நெருங்கி, "என்ன அண்ணாத்துரை? சௌக்கியமா?... இப்படி வாருங்கள்!" என்று சொல்லிக்கொண்டே அண்ணா அவர்கள் தோளின் மீது கையைப் போட்டுத், தனியே இரகசியம் பேச அழைப்பது போல அழைத்தார். பலர் குழுமியிருக்கும்போது இப்படிப்பட்ட ஆடம்பர நடிப்பை நடித்துக் காட்டுவது படாடோபக்காரர்களிடத்தில் பொதுவாகக் காணக்கூடியதேயாகும். அத்தகைய ஆடம்பர நடிப்பு குமாரராசாவிடத்தில் காணப்பட்டதில் வியப்படைவதற்கில்லை. அது அவரது ஆடம்பர வாழ்க்கைக்கு ஏற்ற இயல்பு. அத்தகைய படாடோபப் பசப்பு நடிப்புக்களுக்கும், பசப்புமொழிகளுக்கும் மதிப்புத் தர விரும்பாத அறிஞர் அண்ணா அவர்கள், உடனே தம் தோளைச் சுற்றிப் போடப்பட்டிருந்த குமாரராசா அவர்களின் கையை மெல்ல எடுத்துக் கீழே விட்டு, "நான் ஐயாவோடு பேசவேண்டியிருக்கிறது. இப்பொழுது உங்களோடு பேச நேரமில்லை. பிறகு உங்களைப் பார்க்கிறேன்!..." என்று சொல்லிவிட்டு ஐயா நின்று கொண்டிருந்த பக்கம் திரும்பிக்கொண்டார்கள்.

அண்ணா அவர்களிடம் இருந்து இப்படிப்பட்ட விடை வரும் என்று குமாரராசா எதிர்பார்க்கவே இல்லை. அவருடைய முகம் வெட்கத்தைத் தாங்கமாட்டாமல் சுருங்கிக் கறுத்துவிட்டது.

குமாரராசா கூப்பிட்டு அண்ணா போக மறுக்கிறாரே என்பதைக் கண்ட பெரியார் அவர்களுக்கு, உள்ளுக்குள்ளே அடங்காத சினம் பொங்கிற்று. "குமாரராசா என்ன நினைத்துக் கொள்வார்களோ? ஏது நினைத்துக் கொள்வார்களோ? ராசாவின் தயவு இனி இல்லாமல் போய்விடுமோ?" என்பனபோன்ற அச்சங்கள் அவரது உள்ளத்தைக் குடைந்தன. பெரியார் அவர்கள் அண்ணாமீது எரிந்து விழுந்து, "ராசா கூப்பிடுகிறார்! போங்களேன்!...என்னிடத்தில் என்ன பேசவேண்டியிருக்கிறது!..." என்று கண்டிப்புக் குரலில் பேசினார்கள்.

அண்ணா அவர்கள், குமாரராசாவைப் பொருட்படுத்தாதவர்போல் பெரியார் அவர்கள் முன்னிலையில் நின்றுகொண்டு "நான் அவரிடம் பேசவேண்டியது இப்பொழுது ஒன்றுமில்லை!...' என்று கூறிவிட்டு வேறுபக்கம் எதையோ பார்ப்பதைப் போல் பார்வையைச் செலுத்தினார்கள். குமாரராசா "எங்கே சினந்துகொள்கிறாரோ, என்னவோ" என்று எண்ணிக்கொண்டு, பெரியார் அவர்கள், அவரிடம், வண்டி புறப்படும் வரையில், வேறு ஏதுஏதோபற்றிக் குழைந்து குழைந்து பேசி, அவரது சினத்தைத் தணித்துக் கொண்டிருந்தார்கள்!

மன்றம்

இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

மலர் 5 ★ (15—11—56) ★ இதழ் 14

எகிப்தில் ஈடன்

ஆங்கில ஏகாதிபத்திய வெறி மீண்டும் தலை தூக்கி யிருக்கிறது. இரண்டாவது உலகப் போருக்குப் பின் ஏகாதிபத்தியங்களின் காலம் மலையேறி விட்டது எனப் பலரும் நினைத்தனர். இந்தியா, பர்மா, இலங்கை போன்ற இடங்களில் அமைதியுடன் இங்கிலாந்து தனது ஆதிபத்தியத்தை நிறுத்திக்கொண்டது கண்டு அந்த நம்பிக்கை உண்டானது. உலகச் சூழ்நிலை கண்டு, ஏகாதிபத்தியம் அடங்கிவிட்டது, இனிக் கீழ் நாடுகளில் அமைதி நிலவும் என்ற எண்ணம் மேலோங்கியது. ஏகாதிபத்தியம் வலிவிழந்த போதிலும் ஏகாதிபத்திய வாதிகள் இன்னும் இருக்கின்றனர். அதிலும், பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டை மனதில் வைத்துப் பட்டாளத் துணைகொண்டு பாரை அடக்கியாளலாம் என்ற ஏகாதிபத்தியக் கனவு கண்டு, துள்ளிக் குதிக்கவும் சிலர் இருக்கின்றனர். அத்தகைய கடந்த காலத்தைப் பார்த்தபடி, எதிர்காலத்தில் நுழைய முயலும்-அங்குள்ள பேராபத்துக்களைக் கவனிக்காமல் செல்லும், ஏகாதிபத்தயவாதிகளின் பிரதிநிதியான ஈடன் எகிப்தின்மீது தனது படை வலிவை ஏவியிருக்கிறார்.

எகிப்து நாடு அந்நிய ஆதிக்கத்திலிருந்து அண்மையில்தான் விடுதலை பெற்றது. நான்கு ஆண்டுகளுக்கு முன்னர், பரூக் மன்னர் மக்கள் எழுச்சிக்கு ஆற்றாது ஓடினார். நான்கு மாதங்களுக்கு முன்னர்தான்—கடைசி பிரிட்டிஷ் கொடி எகிப்து நாட்டை விட்டு அகற்றப்பட்டது. புதிய குடியரசு மலர்ந்து நான்கு மாதங்களில், அந்த நாட்டை வல்லரசுகள் சூழ்ந்துகொண்டுள்ளன, போர்க்கணைகளை வீசியுள்ளன.

"மகத்தான துரோகம்"

"மாபெரும் சதி"

"அநியாயம், அக்கிரமம், அடாத செயல்!"

கண்டிக்காதார் கிடையாது. இங்கிலாந்தும் பிரெஞ்சும் இஸ்ரேலும், தொடுத்துள்ள அக்கிரமப் போரை எதிர்த்து ஐக்ய நாடுகளின் பேரவை தீர்மானித்துள்ளது, போர் நிறுத்த எச்சரிக்கை விடுத்தது. உலக நாடுகளின் கண்டிப்பையும் பொருட்படுத்தாமல், ஏகாதிபத்திய வெறியர்கள் எகிப்தைத் தாக்குவதில் ஈடுபட்டனர். செங்கடல் அருகே செங்குருதி பாய்ச்சப்பட்டது, பாலைவனத்தில் பிணங்கள் விழுந்தன, எகிப்திய பள்ளிக்கூடங்கள், மருத்துவ நிலையங்கள் விமானத் தாக்குதலுக்கு ஆளாயின, குழந்தைகள் இறந்தன. எனினும், எகிப்து போராடியது—உரிமைக்கு, உயர்வுக்கு, நீதிக்கு, மதிப்புக்குப் போராடியது.

ஈடனின் எதேச்சாதிகாரப் போக்கு, மற்ற நாடுகளுக்கு மட்டுமல்ல, இங்கிலாந்து மக்களுக்கே மிகப் பெரும் திகைப்பையும் கோபத்தையும் தந்துள்ளது.

அதன் வரலாற்றிலேயே இதற்கு முன் இல்லாத வாறு, இங்கிலாந்து பார்லிமெண்ட் கூட்டம் குழப்பம் காரணமாக முதல்நாள் சிறிதுநேரம் ஒத்திவைக்கப்பட்டது.

பாராளுமன்றத்துக்கு வெளியே மக்கள் கூட்டம் ஈடன் நடத்தும் போருக்கு, எதிராக ஆர்பரித்தது. போலிசு பாதுகாப்பில், கூட்டம் நடைபெற்றது. மந்திரிகள் நடமாடினர்.

பெர்ட்ரண்டு ரசல் என்னும் பேரறிஞர்—இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர்—"பைத்தியக்காரத்தனமான வெறிச் செயல்" என ஈடனின் செயலைக் கண்டித்துள்ளார். முன்னாள் முதலமைச்சர் அட்லியும் கண்டித்துள்ளார்.

" நாசி வெறியர்கள் செய்த அதே போர்க் குற்றங்களை நீங்களும் செய்கிறீர்கள்; எகிப்தின்மீது போர் தொடுக்காமல் படை யெடுத்துச் சென்றதைப்போலவே, இட்லரும் நார்வே மீது படையெடுத்தார்." என்று ஈடனை இட்லருக்கு ஒப்பிட்டு பெவான் பேசினார்.

"கொலைகாரர்கள், பொய்யர்கள்" ஈடனைச் சார்ந்த மந்திரிகளுக்குத் தரப்பட்ட பெயர்கள்.

ஈடனின் செயலைக் கண்டித்து, அவருடைய மந்திரி சபையில் இருந்த அந்தோனி நட்டிங் என்பவர் பதவிவிட்டு வெளியேறினார்.

லண்டன் நகரில் எதிர்ப்பு ஊர்வலம், எடின் பர்க் நகரில் கல்வீச்சுகள், இவ்வாறு ஈடனுக்கு எதிராக, மற்ற நாட்டு மக்கள் மட்டுமல்ல,

இங்கிலாந்து மக்களே உள்ளனர். காரணம், ஏகாதிபத்திய வெறித்தன்மைக்கு இனி இடமில்லையென்பதை இங்கிலாந்து மக்களும் உணர்ந்திருக்கின்றனர். எகிப்தின் மீது வீசப்படும் குண்டுகள் நாளை இங்கிலாந்து மீதும் திரும்ப விழலாம் என்பதை அவர்கள் அறியாமலில்லை.

எகிப்து சிறிய நாடு, படை வலியில் பிரிட்டனுக்கு எதிராக நிற்க முடியாது. ஆனாலும் விடுதலை பெற்ற நாடு, உரிமை உணர்வுடைய நாடு; மணற்காடு பிணக்காடான போதிலும், நைல் ஆறு இரத்த ஆறான போதிலும், பிரமிது கோபுரங்கள் அளவு எலும்புகள் அடுக்கப்பட்ட போதிலும், கடைசி எகிப்தியன் உள்ளவனாகி கடைசி எகிப்தியனின் கடைசி சொட்டு இரத்தம் இருக்கும்வரை. எகிப்து போராடத் தீர்மானித்தது, பலமான தாக்குதலுக்குப் பணிய மறுத்தது. நேர்மை அதன் பக்கம் இருந்தது. உலக நாடுகளின் நேசம் அதன்பால் ஈர்க்கப்பட்டது.

சூயஸ் கால்வாய்ப் பகுதியில், பெரியதொரு சதித் திட்டத்தை ஈடன் உருவாக்கி, இஸ்ரேல், துணைகொண்டு, அதை நிறைவேற்றிட முயன்றிருக்கிறார். அந்த ஆணவ முயற்சி இப்பொழுது ஓரளவு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. சூயெஸ் கால்வாயில், எகிப்துக்கு இழைக்கப்பட்டுள்ள தீங்கைத் தீர்த்து, அநியாய ஆக்ரமிப்பில் இறங்கியுள்ள இஸ்ரேலையும்; அதற்குத் துணைபோன பிரிட்டனையும், பிரான்சையும் வெளியேற்றுவதில் ஐக்ய நாடுகள் பேரவை வெற்றி பெற வேண்டும். இல்லையேல், ஐக்ய நாடுகள் சபை முன்பிருந்த உலக நாடுகள் சபை (லீக் ஆப் நேஷன்ஸ்) போல மறைவதுடன், எகிப்தில் மூளுகின்ற போர் உலகப் போராக ஆகிவிடலாம். போர் நிறுத்தம் அமைதிக்கு வழி காணாவிட்டால், மீண்டுமொரு அமளி ஏற்பட்டு, வல்லரசுகள் அதில் சிக்கி, ஒன்று மற்றொன்றை அழிக்கக் கருதி, எல்லாம் அழிந்து, உலகமே அழியும் விதத்தில் முடியும். பாலைவனத்தில் கிளம்புகிற மணற்காற்று பொல்லாதது, சிறிய காற்று வளர்ந்து பெரும் சூறாவளியாகி, மணலை வாரியிறைத்து, நகரங்களை மணல் மேடுகளாக ஆக்கிவிடும். எகிப்து நாட்டில் சுழலும் சிறு போரை, வையகத்தை அழிக்கும் பெரும் போராக மாற்றி விடாமல் பார்ப்பதுடன், எகிப்தின் நேர்மையும், நியாயமும் பாதுகாக்கப்படும் விதத்தில், ஐக்ய நாடுகள் பேரவை செயலாற்றவேண்டும். அமைதியில் நம்பிக்கை உள்ள உலக நாடுகள் அதற்கு உதவ வேண்டும்.

புதிய எல்லைகள்

இந்திய நிலப் படத்தில் புதிய எல்லைக் கோடுகள் அழுத்தப்பட்டுள்ளன! பிளவுபட்டுக்கிடந்த பகுதிகள், சேர்க்கப்பட்டும் பகுக்கப்பட்டும் பதினான்கு மாநிலங்களாகக் காட்சியளிக்கின்றன! மாநிலங்கள் பல மொழிவழி அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளன. திராவிடத்தைப் பொறுத்தவரை, அதன் எல்லையில், ஆந்திரம், கர்நாடகம், கேரளம், தமிழகம் ஆகிய நான்கு மாநிலங்கள் மலர்ந்துள்ளன. புதிய மாநிலங்கள், வளம் பலபெற்று, உரிமையுடன் வாழ்வதாக!

மொழிவழி மாநிலங்கள் பலத்த போராட்டங்களுக்குப்பின் அமைக்கப்பட்டுள்ளன! மொழிவழிக் கொள்கைக்காகப் பலர் பாடுபட்டனர், பலர் தங்களைப் பலியாகத் தந்தனர். பலர் செய்த தியாகத்தின் அறிகுறியாக மொழிவழி மாநிலங்கள் தோன்றியுள்ளன! அந்த மாவீரர்களின் பெயர் வரிசை, புதிய மாநிலங்களைப் பார்க்கும்பொழுது நமது கவனத்துக்கு வருகிறது!

மொழிவழி அடிப்படையில் மாநிலங்கள் பல அமைந்திருக்கின்றன; சில அவ்வாறு அமையவில்லை, அமைக்கப்படவில்லை! புதிய அமைப்புக்கு மராட்டியம் மறுக்கிறது, குஜராத்தில் கோபம் கொப்பளிக்கிறது. மொழி வழியில் அங்கு மாநிலம் அமைக்கப்படவில்லை! காங்கிரசின் கராச்சி தீர்மானப்படி, மொழி வழி மாநிலங்கள் அமைக்கப்பட வேண்டும் என்பதாகும். விடுதலைப் போராட்ட காலத்தில் காங்கிரசு அந்தத் தீர்மானத்தைப் படித்துப் படித்துச் சொல்லியது; சுதந்திரம் வந்ததும், மொழிவழி மாநிலங்கள் அமைக்கப்படுமென காங்கிரசுக்காரர்கள் முழங்கினர். மக்களும் நம்பினர். விடுதலை பெற்ற இந்தியாவில் காங்கிரசு அரசாங்கம் புதிய மாநிலங்களை அமைத்துள்ளது. கராச்சி தீர்மானப்படி அல்ல; டில்லி எதேச்சாதிகாரத் தீர்மானப்படி! மராட்டியத்தில் சோகம், பம்பாயில் இரத்தக் கிளரி, ஆமதாபாத்தில் அமளி, ஒரிசாவில் கண்டனம், பரத கண்டத்தின் பல பகுதிகளிலும் கூக்குரல், இவைகளுக்கு மத்தியில், மத்திய அரசாங்கம் புதிய மாநிலங்களை அமைத்துள்ளது!

பல மாநிலங்களுக்கு எல்லைக்கோடுகள் அல்ல, தொல்லைக் கோடுகள் போடப்பட்டுள்ளன!

காரணம், ஒரு கொள்கை, ஒரு நீதி அடிப்படையில் புதிய மாநிலங்கள் அமைக்கப்பட

வில்லை. நேர்மை எதுவுமின்றி, நினைத்த வாறு—நேரு பண்டிதரும் டில்லி ஆதிக்கமும் நினைத்தவாறு எல்லைக் கோடுகள் வீசப்பட்டுள்ளன. வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்பதைப்போல, தங்களுக்குள்ள அதிகார பலத்தையும், படைப் பலத்தையுங் காட்டி, புதிய எல்லைகள் அமைக்கப்பட்டுள்ளன. மக்களின் குரல், துப்பாக்கிச் சத்தத்தின் கீழ் அடக்கப்பட்டுள்ளது.

மொழிவழி அமைக்கப்படாத பம்பாய் போன்ற பகுதிகளில் நீண்ட காலத்துக்கு அமைதி ஏற்படாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மொழி வழி ஏற்பட்ட மாநிலங்களுக்கு இடையில்கூட தீர்க்கப்படாத எல்லைப் பிரச்சினைகள் உள்ளன. குறிப்பாக தமிழகத்தின் வடக்கிலும், தென்மேற்கிலும், சரியான எல்லைகள் அமைக்கப்படவில்லை. மொழி அடிப்படையில் தமிழகத்துடன் சேர்க்கப்பட வேண்டிய பகுதிகள் இன்னும் பிரிந்து நிற்கின்றன. வடக்கெல்லைப் பிரச்சினையை மத்திய அரசாங்கம் இன்னும் ஒத்திப்போட முயல்கிறதேயன்றி, அதற்கு விரைவில் முடிவு காணும் வகையில் செயலாற்றவில்லை. எல்லைப் பிரச்சினையில் நேர்மையான முடிவு ஏற்படும்வரை. மாநிலங்களுக்குள் அமைதி ஏற்படுவது இயலாத தொன்று.

மேலும் தமிழகத்தைப் பொறுத்தமட்டில் மற்றொரு அநீதி, பெயர் வைப்பதில் இழைக்கப்பட்டுள்ளது. தமிழ்ப் பகுதிகள் அல்லாதவைப் பிரிந்து சென்ற பின்னும், எஞ்சியுள்ள சென்னை மாநிலத்தைத் "தமிழகம்" என்று அழைத்திட காமராஜர் மந்திரி சபை மறுக்கிறது, அவர் ஒரு "பச்சைத் தமிழர்" என்ற போதிலும் !! தமிழர்களின் ஒருமித்த வேண்டுகோளை அவர் அலட்சியப்படுத்தியுள்ளார்; சங்கரலிங்கனாரின் பிணமான கோலங்கூட, கோலோச்சும் விருதை வீரர் மனத்தை மாற்றியதாகத் தெரியவில்லை! இளகாத மனம், இளக முடியாதபடி அவ்வளவு இறுகிய மனம், கல் மனம்—தமிழகத்தைத் "தமிழகம்" என ஏற்றுக்கொள்ள மறுக்கிறது; தமிழ்ப் பகுதிகளைத் தமிழகத்துக்குள் கொண்டுவர மறுக்கிறது !

வல்லவர்கள் வாய்க்கால் அமைப்பார்கள். ஆனால் வல்லவர்கள் அமைத்தபடியேதான் வாய்க்கால்கள் என்றென்றும் இருப்பதில்லை. தண்ணீர் போகும் வேகத்தையும், ஆழத்தையும் அறியாமல், புதிய வாய்க்கால்கள் வெட்டிக் கரைகள் போட்டால், வெள்ளம் வரும்பொழுது கரைமீறி வெள்ளம் பாயும், வாய்க்கால் திசை மாறி ஓடும், இயற்கைக்கு ஒத்த முறையில் புதிய வாய்க்கால் தானாகத் தோன்றும். அதுபோல மக்களின் மனப்போக்கையும், உணர்ச்சி வேகத்தையும், அறியாமல் டில்லி வல்லபர்கள் கரை போடுகிறார்கள், நீதியும், நேர்மையும் அற்ற வகையில். மக்கள் வெள்ளம் அவற்றை மீறி, இயல்பான, நேர்மையான வழியில் செல்லுமென்பது உறுதி.

திராவிடப் பண்பாடு

"இந்தியப் பண்பாட்டை வளர்ப்பதில் திராவிடப் பண்பாடு பெரும் பங்கு கொண்டது என்பதும், இந்தத் திராவிடப் பண்பாடும் தமிழ்ப்பண்பாடும் பெரும்பாலும் ஒன்றே என்று கருதப்படலாம் என்பதும் இன்றிய பேறிஞர்களின் கருத்தாகும்.

"தமிழ் மொழி இரண்டாயிரம் ஆண்டுகளாகப் பெரிதும் இடையீடு இன்றியே வளர்ச்சியடைந்து வந்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது, ஏனைய திராவிட மொழிகளாகிய கன்னடம், தெலுங்கு, மலையாளம் முதலியவற்றின் இலக்கிய வளர்ச்சிக்குத் தமிழ் இலக்கியத்தின் செல்வாக்கு உறுதுணையாக இருந்திருக்கிறது."

—டி. எம். நாராயணசாமிப்பிள்ளை—பட்டமளிப்பு விழாச் சொற்பொழிவு — 22—10—56 — அண்ணாமலைநகர்.

கருத்துக் கதிர்

காங்கிரசுக்கு எதிர்க்கட்சி வேண்டும்

"காங்கிரசுக்கு எதிரான கட்சி காங்கிரசு அமைப்புக்கு வெளியேதான் உருவாகவேண்டும். காங்கிரசின் கொள்கைகளிலிருந்து வேறுபட்டவர்களால் அத்தகைய கட்சி அமைய வேண்டும். நம்பக்கூடிய நல்ல மனிதர்கள் அக்கட்சியில் இருக்கவேண்டும். காங்கிரசுக்குச் சமமாக அல்லது அதைவிட சிறந்ததாகவே அக்கட்சி ஆரம்பம் முதற் கொண்டு இயங்க வேண்டும்."

—சி. இராசகோபாலாச்சாரியார் – பேச்சு – 25—10—56 — சென்னை இலட்சுமிபுரம் இளைஞர் சங்கம்.

* * *

எதிர்க்கட்சியின் இன்றியமையாமை

"பாராளுமன்றத்தின் வாயிலாகநிகழும் மக்களாட்சி முறை நன்று நடைபெறவேண்டுமானால், இரண்டு கட்சிகள் இருக்கவேண்டும். ஆற்றல் நிறைந்த எதிர்க்கட்சியும் செயல்படவேண்டும். ஒரே கட்சி அரசியலை நடத்துவது என்பது இயலும். ஆனால் எதிர்க்கட்சி இல்லாது போமேயானால், ஒருகட்சியே நடத்தும்ஆட்சி குறிப்பிட்ட சிலரால் நடத்தப்படுவதாக இருக்கும். ஏகாதிபத்தியமாகக் குன்றி விடக்கூடும். வேறுபட்ட கட்சிகளின் அரசியல் திட்டங்களின் நலன் தீங்குகளை ஆராய்ந்து அவற்றின் மீது முடிவு கூறும் வாய்ப்பை வாக்காளர்களுக்கு வழங்குவதற்காகக் குறித்த காலங்களின் இறுதியில் பொதுத்தேர்தல் நடத்தப் பெறுகிறது. மாற்றுத்திட்டங்களை மக்களுக்கு முன்வைக்காவிடில், தேர்தல் முறையானது பயனற்றதாய்விடும்.

"அரசியலமைப்பின்படி நேரிய முறையில் உயர்ந்தகொள்கைகளைக் கொண்ட ஒரு எதிர்க்கட்சி நம் அரசாங்கத்திற்கு இன்றியமையாத தொன்று. ஆனால் அப்படிப்பட்ட அரசியல் எதிர்க்கட்சி ஒன்று உருவாகாததற்கு வருந்த வேண்டியிருக்கிறது."

—அண்ணாமலைப்பல்கலைக் கழகத் துணை வேந்தர் டி. எம். நாராயணசாமிப்பிள்ளை - பட்டமளிப்பு விழாச்சொற்பொழிவு — 22—10—56 — அண்ணாமலைநகர்.

* * *

யானைக்குப் பாகன்-ஆளும் கட்சிக்கு எதிர்க்கட்சி

"எதிர்க்கட்சி இல்லாத அரசாங்கம் மக்களின் வாழ்வையே நாசம் செய்ய ஏதுவாகும். இது திருக்குறளிலும் கூறப்பட்டிருப்பது எனக்களித்த வரவேற்பிதழிலிருந்து தெரிகிறது. திருக்குறளில் கூறப்பட்டிருப்பதற்கு மேலாக நான் அதிகமாக (எதிர்க்கட்சி வேண்டும் என்று) எதுவும் கூறமுடியாது. யானைக்குப் பாகன் எப்படி அவசியமோ, அப்படி ஆளும்கட்சிக்கு எதிர்க்கட்சி அவசியமாகும். ஆனால் வெறும் எதிர்க்கட்சியாக மட்டும் இருந்து எதிர்ப்பு தெரிவித்துக்கொண்டிருப்பது மட்டும் போதாது. சமயம் நேரிடும் போது, ஆளும் கட்சியை எதிர்த்து ஆள வேண்டிய திறமையுள்ள ஒரு எதிர்க்கட்சியாகவும் இருக்கவேண்டும்."

—எச். வி. காமத்-பரமக்குடி ஊராட்சி மன்ற வரவேற்புக்குப் பதில் — 28—10—56 —பரமக்குடி.

* * *

தென்னாட்டின் (திராவிடத்தின்) பொதுத்தன்மை

"தென்னாட்டின் பொது நலனை மனதில் கொண்டு ஒருவர்க்கொருவர் ஒத்துழைப்பு உதவியுடன் பணியாற்றுதல் அவசியம். பார்க்கப்போனால் மலையாள மொழிக்கும், தமிழ் மொழிக்கும் அதிக வேறுபாடு இல்லை. உச்சரிப்பைக் கொஞ்சம் மாற்றினால் தமிழ மலையாளமாகிவிடுகிறது. தெலுங்கும் கன்னடமும் மிகவும் நெருங்கியவை. தென்னிந்திய அரசுகளிடையே பொதுவான அம்சங்கள், விஷயங்கள் பலஉள. ஆதலின் பிரிந்துசெல்வோருடன் பல தடவை மீண்டும் சந்தித்துப்பேச வாய்ப்புக்கள் ஏற்படும் என்று நம்புகிறேன்."

—டாக்டர் ஏ. எல். முதலியார்—சென்னை மேல் சபைக் கூட்டத்தில் பேச்சு - 23—10—56

அண்டசராசரம்

(55)

திருமால் சொல்லிய நல்லுரைகள். ஆடவனை ஆடவன் காமுறுவது அடாது என்ற தெளிவுரை—சிவனுக்கு ஏறவில்லை. எதிரே நிற்கும் மோகினியைக் கண்ட மோகத்தில் முக்கண்ணனார் இருந்தாரேயன்றி, மோகினி வேடத்தில் விட்டுணு இருக்கிறார் என்பதைக் கவனிக்க மறுத்தார். அவன் ஆடவனே யென்றாலும், மயக்குறு வேடங் கொண்டதால் அவனை மணந்தே தீருவேன் என்று சிவனார் துடித்தார். "நீ ஆடவனாக இருந்தபோதிலும் இதற்குமுன் உன்னைக் கூடி நான் முன்பு இன்புறவில்லையோ?" எனப் பழங்கதையைச் சிவன் விட்டுணுவுக்கு ஞாபக மூட்டுகிறார்.

முன்னை வேதன் முடிந்தனன் போதலு
முன்னோடே வந் துவப்போடு கூடினோம்
பின்ன ரிந்தப் பிரமனை யுந்தியால்
அன்னை யாகி யளித்தனை யல்லையோ.

[கந்தபுராணம்-மகாசாத்தாப் படலம் பாடல் 36]

"முன்பு பிரமதேவன் இறந்து விடவும், உன்னிடம் வந்து உன்னை நாம் உவப்புடன் கூடினோம். பின்னர், நீ அன்னையாகி, உந்திக் கமலத்தின் வழியாக பிரமனை அளித்தனை அல்லவா?" சிவன் அதற்கு முன் பிரமா பிறந்த வரலாற்றைக் குறிப்பிடுகிறார். இந்தக் கதைப்படி, சிவனுக்கும். விட்டுணுவுக்கும் பிறந்தவர் பிரமா. இந்த பிரம உற்பத்திக் கதை கந்த புராணத்தில் மட்டும்தான் காணப்படுகிறது. பிரமாவுக்கு அன்னையாக, தனக்கு காமக் கிழத்தியாக சிவனார் குறிப்பிட்டு, மறுபடியும் இப்பொழுது உன் மையலில் சிக்கினேன், வருவாயாக மாதுகோலத்து மாதவனே எனக் கூப்பிட்டார்.

மற்று இரண்டு பாடல்கள் சிவன் விட்டுணுவைக் கைப்பற்றியதைப் பற்றிச் சொல்கின்றன.

ஆகை யாலுன் னணிநலந் துய்த்திட
வோகை யாவிவ ணுற்றனன் செல்கென
மாகை யாரப் பிடிப்ப வருதலும்
போகை யுன்னிப் பொருக்கென வோடினான்.
நாணி போடிய நாரண னைப்பிறை
வேணி யண்ணல் விரைவுட னேகியே
பாணி யாலவன் பாணியைப் பற்றினான்
சேணி னின்று திசைமுகன் போற்றவே.

"ஆகையால் உனது அழகிய நலத்தைச் சுவைத்திடும் விருப்பத்துடன் நான் இங்குவந்திருக்கின்றேன், என விட்டுணுவின் கையைப் பிடிக்க சிவன் வருதலும், வரும் ஆபத்துக்கு அஞ்சி விட்டுணு உடனே ஓடிவிட்டான்.

நாணத்துடன் ஓடுகின்ற நாராயணனைப் பிறை சூடிய சிவன் விரைவாகத் தொடர்ந்து அவன் கையைப்பற்றி நின்றான். இந்தத் திருக்கோலத்தைக் கண்டு, ஆகாயத்திலிருந்து பிரமாதி தேவர்கள் போற்றினார்கள்."

ஆணை ஆண் விரும்புதல் முறையன்று என்று விட்டுணு சொல்லியுங் கேட்காமல், சிவன் பின் தொடர்ந்து அவன் கையைப் பிடித்து இழுத்துச் சென்றார், மேருமலைச்சாரலில் மிக அடர்ந்த இடத்துக்கு. சிவன் செய்

யும் "சீரிய செயலைப் பார்த்து பிரமதேவன் மிகவும் மெய்சிலிர்த்துப் போற்றினனும்!

" நண்ணி யேதனி நாயகன் அவ்விடைப்
பெண்ணின் நீர்மையைப் பெற்றிரு நாரண
னுன்னன கிழ்ந்து மயக்குற் றுருகியே
யெண்ணி லின்புறக் கூடின னென்பவே.

தனி நாயகனும் சிவன், பெண்ணின் தன்மை கொண்ட நாரணனை உள்ளம் நெகிழ்ந்து மயக் குற்று காதலால் உருகி, எண்ணுதற்கரிய இன்பத்துடன் கூடினன்.

கடவுட் கதை, கந்த புராணப் பாடல்! சிவ னும் திருமாலும் அடைந்த இன்பத்தைப் பக் திப் பரவசத்துடன் போற்றுகிறது!

இருவருக்கும் குழந்தை கூடப் பிறந்து விடு கிறது:

இந்த வண்ண மிருக்க முராரியும்
அந்தி வண்ணத் தமலனும் ஆகியே
முந்து கூடி முயங்கிய எல்லையில்
வந்த னன்எமை வாழ்விக்கும் ஐயன்.

விட்டுணுவும், அந்தியின், செந்நிறத்தைப் பெற்ற சிவனும் கூடி முயங்கியபின், எம்மை வாழ்விக்கும் ஐயன்—ஐயனர் அவதரித்தார்

விட்டுணுவின் மோகினி அவதாரத்தால், தேவர்களுக்கு பாற்கடல் அமிர்தம் கிடைத் தது, சிவனர் காமக் கடல் அமிர்தங் கண்டார், புராணக்காரர்களுக்கு ஐயனர் கிடைத்தான்.

சிவனுக்கும் திருமாலுக்கு மையல் மூண்ட கதைகள் வேறு பலவும் இருக்கின்றன. கந்த புராணத்தில் ததிசியுத்தரப் படலத்தில், விட்டுணு மோகினியவதாரம் எடுத்த மற் ெருரு கதை சொல்லப்படுகிறது. முதலில் விட்டுணு மோகினி அவதாரம் எடுத்தது, அரக்கர்களை மயக்க, இரண்டாவது தடவை அவர் மோகினியானது. தவசிகளை மயக்க!

தாருகாவனத்திலிருந்த முனிவர்கள் தவத் திற் சிறந்தவர்களாக இருந்தார்களாம், அந்த முனிவர்கள், "தவமே பெரிது, கருமமேவலிது கடவுள் வேண்டாம்" என்று நிச்சயித்து, தவத்தில் ஈடுபாடு உடையவர்கள் மூன்று முதற்கடவுள்களைப்பற்றியும் அலட்சியமாக இருந்தார்களாம். முனிவர்கள் அப்படியென் ருல், முனிபத்தினிகளும் "கற்புதான் பெண் களுக்குச் சிறந்தது, கற்போடு இருப்பவர் களுக்குத் தெய்வத்தைப்பற்றி கவலை வேண் டாம்" என்று இறுமாப்போடு இருந்தார் களாம். முனிவர்களும், பத்தினிகளும் இவ்வ ளவு அகங்காரத்துடன்; தம்மை மதிக்காமல் இருப்பது மூவர்களுக்குத் தெரிந்தது. பாற் கடலில் இருந்த விட்டுணு துயில் விட் டெழுந்து, கைலயங்கிரிபோய், உமாபிராட்டி யுடன் இருந்த சிவபெருமானைக் காண அனு மதி பெற்று தாருகாவனத்து முனிவர்கள் செய்யும் அக்கிரமங்களைப்பற்றிச் சொன்னர்.

தாருகாவனத்து முனிவர்கள்—அவர்களும் பிராமணேத்தமர்கள்தாம் — செய்த அக்கிரம மென்ன? மூவர்களை மதிக்காமல், தவஞ்செய்து கொண்டிருந்தார்கள். அதுதான் விட்டுணு வுக்கு அக்கிரமமாகப்பட்டது.

தவத்தைச் செய்வதால் முனிவர்கள் செருக் குடன் இருக்கிருர்கள். அவர்கள் தவத்தை அழிக்கவேண்டும். முனிபத்தினிகள் கற்புடன் இருப்பதால், பெருமைப்படுகிருர்கள். அவர் களுடைய கற்பு குலைய வேண்டும். இவ்வாருக சிவபெருமான் திட்டமிட்டு விட்டுணுவை அழைத்துக்கொண்டு வெளிவந்தார்.

"நீ போய் தாருகாவனத்து முனிவர்களின் தவத்தை அழித்துவிடு" என்று சிவபெரு மான் விட்டுணுவுக்குக் கட்டளையிட்டார்.

"எப்படி?" விட்டுணு தயங்கினர்.

"எப்படியா? முனிவர்களை அடக்குவது எப்படி? மோகினி உருவத்தால்!"

விட்டுணு மோகினி உருவம் எடுத்தார்.

"நான்போய் முனிபத்தினிகளின் கற்பை அழித்து வருகிறேன்!" சிவன் பிச்சாண்டார் திருக்கோலம் எடுத்தாராம். அழகிய இள மைப் பருவத்து உருவம், ஆடையணி ஏதுவு மின்றி!

முனிவர்களை மயக்க விட்டுணு மோகினி உருவெடுத்தார். முனிபத்தினிகளை மயக்க சிவன் பிச்சாடன வேடங் கொண்டார். மற்ற வர்களை மயக்குவதற்கு எடுத்த வேடங்கள், முதலில் அவர்களையே மயக்கிவிட்டது. சிவன் கொண்ட கோலத்தைக் கண்டு, மோகினி ஆடை சோர காமந் தாங்காது தவித்தாளாம்.

சிவனுடைய அழகில் மயங்கியதால், விட் டுணுவுக்கு மால் என்ற பெயருண்டாயிற்றும்.

மோகினியைத் தடுத்து, "தாருகாவனத்து முனிவர்களை மயக்கச் செல்!" என்று பிச் சாண்டார் சென்ருர்.

மோகினி தாருகாவனம் சென்ருள், முனிவர் கள் தங்கி யிருக்கும் இடங்களுக்கு முன்

சென்று ஆடிப்பாடி, அம்புகளை வீசுவது போல கண்பார்வையை வீசி, முனிவர்களின் மனதைத் துளைத்தாளாம் முனிவர்கள் என்ன செய்வார்கள்?

கண்டனர் முனிவ ரம்மா கதுமெனக் காம ளேட்கை
கொண்டனர் விரத நோன்மை குலைந்தனர் மகத்தின் செய்கை
விண்டனர் மதனீர் பாய மெலிந்தனர் வெதும்பி வேழ
முண்டிரு கனியா மென்ன வுணர்வுபோ யுருகா நின்றார்

வேழம் உண்ட விளாங்கனிபோல, உணர்வு போய் உருகி முனிவர்கள் மோகினியைச் சூழ்ந்து நின்றார்கள்.

மற்றொரு பக்கம், சிவன் "பண்ணிசை மறைகள் பாடி" முனிபத்தினிகள் இருக்குமிடம் வருகிறார். பர்ணசாலையின் முன் பிச்சை கேட்டுச் சிவன் நின்றார். மறையோசை கேட்டு, வெளிவந்த மாதர்கள், நிர்வாணக்கோலத்தில் நிற்கும் அழகனைக் காண்கிறார்கள்.

"கண்ணுறு மாதர் யாருங்
காமனெங் கணையின் மூழ்கி
உள்நிகழ் உணர்வு மாழ்க
உயிர்பதை பதைத்துச் சோர."

மோகங்கொண்டுவிடுகிறார்கள். காமன் வீசுசிற கணைகள் பட்டு, உயிர் பதை பதைத்து விட்டது அவர்களுக்கு.

காமவேதனையில் முனிபத்தினிகள் பரதவித்ததை, கச்சியப்பச் சிவாச்சாரியார்—அவர் தாம் தமிழில் கந்தபுராணத்தைப் பாடியவர்—31 பாடல்களில் தெரிவித்துள்ளார்.

வீதியில் நிற்கும் மாதர்கள், பிச்சாண்டாரைப் பார்த்து, ஆடை நழுவி விழ, நிற்கின்றார்களாம்.

சிலர் பிச்சை யெடுக்கும் பெருமானைப் பார்த்துக் கும்பிடுகிறார்கள்! கும்பிடுதல், அவருக்கல்ல, நிர்வாணமாயிருக்கும் கோலத்துக்கு!

"வாச நீங்கி வளையுகுத்து ஐயர்தங்
கோச நோக்கினர் கும்நிடு வார் சிலர்"

நிர்வாணக் கோலத்திலிருக்கும் பைராகியைப் பார்த்து, வெட்க முற்று கண்ணைமூடுவதுபோலப் பார்த்தும், பின் தங்களுடைய ஆடைகள் வீழ்ந்து நடுவீதியில் நின்றிட வெட்கமுற்றாற்போல கையால் தங்கள் அங்கங்களை மறைக்க முயன்றும் முனிபத்தினிகள் புன்முறுவலுடன் நாணமுற்றிருந்தார்களாம்.

"அண்ணன் மேனிகண் டார்வமுற் றுடைபோய்ப்
பெண்ணி னீர்மைப் பெருங்குறி மூடியுங்
கண்ணை மூடியுங் கைக்கடங் காமையால்
விண்ணை மூடினர் போல்வெள்கினார் சிலர்"!

பல பாடல்கள் ஆபாச மிகுந்தவைகளாக உள்ளன. அவற்றை விடுத்தனம்.

சிவனின் பிச்சாடன வேடத்தைக் கண்டு முற்றகா தாருகாவனத்து இருடி பத்தினிகள் நாற்பத்தெண்ணாயிரம் குழந்தைகளைப் பெற்றனர். அந்தக் குழந்தைகளே நாற்பத்தெண்ணாயிரம் இருடிகளாக ஆனார்களாம்.

அசுரர்களை அடக்க, முனிவர்களை அடக்க விட்டுணு மோகினி உருவெடுத்ததல்லாமல், தனது மனைவியை அடக்கவும் மோகினி வேடம் போட வேண்டியிருந்ததாம். இலக்குமி தேவி தன்னிலும் அழகுடையார் யாருமில்லை என்ற இறுமாப்புடன் இருந்தாளாம். மனைவி பெருமைப்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்ட விட்டுணு அவளுக்குப் பாடங் கற்பிக்க எண்ணி, மோகினி உருவமெடுத்து அவை எதிரில் சென்றார். இலக்குமி தன்னைவிட அழகான பெண்ணைக் கண்டதும், கர்வ மடங்கி விட்டாளாம். இலக்குமி கர்வ மடங்கியதும், தனது உண்மைத் தோற்றத்தைக் காட்டி, விட்டுணு அவளை மன்னித்தாராம்.

அசுரர்களை அடக்க இந்திரன் அழகிய தேவமாதர்களை அனுப்புவது வழக்கம். வீரர் படையில் சமாளிக்க முடியாத எதிரியை, மாதர் படையால் வென்றுவிடலாம் என்பது தேவலோக மந்திரம். தவத்தில் சிறந்தவர்களையும், தன்னை மிஞ்சியவர்களையும் மயக்க மேனகையோ ஊர்வசியோ இந்திரனிடம் இருந்தனர். ஆனால் விட்டுணு அதைவிட ஒருபடி மேல் சென்றனர். எதிரிகளை அடக்க, பெண்களை அனுப்புவதில்லை. அவரேப் பெண்ணுருக்கொண்டு போருக்குப் போய்விடுவார். அமிர்தங் கடைந்த காலத்தில் மோகினி அவதார மெடுத்துச் சென்றார். தாருகாவனத்து முனிவர்களை மயக்க மோகினியாகச் சென்றார். அதுபோல பசுமாசுரன் என்ற அரக்கனை அழிக்க, விட்டுணு பெண் வேடந் தாங்க வேண்டி யிருந்தது.

பசுமாசுரன் என்பவன் பரமசிவனை நோக்கி நீண்டகாலந் தவஞ் செய்தான். அவன் தவத்தை மெச்சி, சிவமூர்த்தி அவனுக்குத் தரிசனந் தந்து, "என்ன வேண்டும்" என்று கேட்டார்.

"எனக்கு ஒரு வரங் கொடுக்க வேண்டும்."

என்ன வரம் கேட்பான் என்பதை யோசிக்காமல், முக்காலமுணர்ந்த முழுமுதற் கடவுள். "சரி. தருகிறோம், கேட்பாயாக!" என்று அருளினர்.

"நான் யார் தலைமீது கைவைத்தாலும், அவன் சிரம் வெடித்து இறக்கவேண்டும்"

"சரி, தந்தோம்." சிவன் வரங் கொடுத்து விட்டார்.

அவ்வளவு பெரிய வரத்தை, முன்பின் யோசிக்காமல் இவ்வளவு சுலபத்தில் சிவன் கொடுத்து விட்டாரேயென்று பசுமாசுரன் ஆச்சரியப்பட்டான். கொடுத்த வரம் சரிதானு என்ற சந்தேகம் அவனுக்கு வந்தது.

"பெருமானே! தாங்கள் கொடுத்த வரம் பிசகாதே?"

"அன்பனே! அப்படி ஏன் சந்தேகம் வந்தது? யாம் அளித்த வரம் என்றும் பொய்யாகாது" சிவபெருமான் பெருமிதத்துடன் சொல்லிக்கொண்டார்.

"அப்படியானுல், நீங்கள் தந்த வரத்தின் பலத்தை நான் பரிட்சை செயது பார்க்கப் போகிறேன்."

"எப்படி?"

"உங்கள் தலைமீது கைவைத்தால் தெரிந்து விடுகிறது."

கையைத் தூக்கிக்கொண்டு பசுமாசுரன் வந்தான். ஆகா! மோசம் போனேமேயென்று இப்பொழுதுதான் பரமசிவனுக்குப் புத்தி வந்தது. அவர் கொடுத்தவரத்தின்படி அவருடைய தலையே வெடித்துவிடும். என்ன செய்வது? பசுமாசுரன் அருகில் வந்து விட்டான். அவன் கைக்குக் கீழ்வராமல் தப்பிக்கொண்டு சிவன் ஓடினுர். வரத்தைத் தந்தவர், வரம் வாங்கினவனைப் பயந்து ஓடினுர் பசுமாசுரன் தொடர்ந்து ஓடிவந்தான். பரமசிவன்களைத்து, பசுமாசுரனிடமிருந்து தப்ப வேறு வழியின்றி, அவன் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து விட்டார்.

சிவன் மறைந்துகொண்டாரேயன்றி பசுமாசுரனிடம் இருந்த வரம் மறைந்துவிடவில்லை.

வரத்தின் உண்மையைச் சோதிக்க எண்ணி, காட்டில் பசுமாசுரன் சுற்றி வந்தான். இரண்டு முனிவர்கள் போய்க்கொண்டிருந்தார்கள். பின்னுல் போய், அவர்கள் தலைக்குமேல் பசுமாசுரன் தன் கையை உயர்த்தினுன். அவ்வளவுதான் இரண்டு தலைகளும் வெடித்து விழுந்தன! அந்த இரண்டு முனிவர்களும் பசுமாசுரனைப் போல தவங்களிற் சிறந்தவர்களென்ருலும், இவன் பெற்ற வரத்தை அவர்கள் பெறவில்லை, சிவன் கிருபை அவ்வளவு தான்.

வரத்தின் மகிமை தெரிந்ததும், தேவர்களைப் பசுமாசுரன் பயந்தோடச் செய்தான். பரமசிவனே, அவன் கண்ணில் அகப்படுவதில்லை. பசுமாசுரன் கைலைமலையைச் சுற்றிச் சுற்றி வந்தான். அவனுடைய முக்கிய நோக்கமெல்லாம், பரமசிவனின் தலைக்குமேல் கையை வைத்துப் பார்த்துவிட வேண்டுமென்பது தான்! பரமசிவனைப் போலிருந்த பக்தகோடிகள் பலர், பசுமாசுரனின் வரத்திற்குத் தவறுதலாகப் பலியாகிவிட்டனர். பசுமாசுரன் பரமசிவனைக் குறி வைத்துத் தேடி வந்தான். வரங் கொடுக்கத் தரிசனந்தந்த அந்த மாதேவர் கொடுத்த வரத்திற்குப் பயந்து மறைந்து ஒளிந்து வாழ்ந்தார்.

பசுமாசுரனின் அட்டகாசத்தைத் தேவர்கள் வைகுண்ட வாசனிடம் போய்ச் சொன்னுர்கள். வைகுண்டவாசன், பாம்புப் படுக்கையை விட்டெழுந்து, அபயமளித்தார் அந்த அபலைத் தேவர்களுக்கு! சிவன் வரத்தைக் கொடுத்துவிட்டு ஒளிந்துவிட்டார், விட்டுணு ஒருவர்தான் இனி அவர்களைக் காப்பாற்ற முடியும்.

விட்டுணு புறப்பட்டார், மோகினி உருக்கொண்டு, பசுமாசுரன் இருக்கும் காட்டுக்கு வந்தார், மென்மையானக் காற்றில் பறந்தாட, பசுமாசுரனுக்கு முன்பாக விட்டுணு மோகினி வடிவிலிருந்த விட்டுணு ஓடினுர். பசுமாசுரன் திகைத்து நின்ருன். மோகினியின் வனப்பு கண்டு மயங்கி நின்ருன். முழுமுதற் கடவுளான சிவபெருமானே, விட்டுணுவின் மோகினி வடிவத்தைக் கண்டு மயங்கிவிட்டாரென்ருல், கேவலம் பசுமாசுரனுல் எப்படி மயங்காமலிருக்க முடியும்? மோகினியைத் துரத்திக்கொண்டு, பரமசிவன் போனதைப் போல அவருடைய பக்தசிகாமணியான பசுமாசுரனும் போனுன். மோக இலக்கணத்தை முற்றுந்தெரிந்தவளாக இருந்தாள் மோகினி! அகப்படுவதுபோல அருகே இருந்து, பின் பிடிபடாமல் எட்டி ஓடி, பசுமாசுரனை அழைத்துச் சென்ருள். கடைசியாக, பசுமாசுரன் அவளைப் பிடித்தான். அவள் மோகினி மயங்கினுள், அவன் மயங்கினுன். அவன் கைகளை விடுவித்து, மோகினி நடனமாடினுள், பசுமா

சுரன் பார்த்து மகிழ்ந்தான். மோகினி அவன் கைகளைப்பற்றி இழுத்து, அவனையும் தன்னுடன் நடனமாடச் செய்தாள். மோகினி ஆடுவதைப் போலவே பசுமாசுரனும் ஆடினன். ஆடல், பாடல் அவன் மனது களிக்க இருந்தது. வேறு எல்லாவற்றையும் மறந்து, மோகினியுடன் நடமாடுவதில் பசுமாசுரன் ஈடுபட்டுவிட்டான், மோகினியைத் தோற்கடிப்பதுபோல ஒத்து ஆடினன்.

ஆட்டத்தின் கடைசியில், கையைச் சுழற்றி, தலைமேலே வைத்து நயம்பட மோகினி நின்ருள். பசுமாசுரனும் அதைப்போல செய்தான். தலைக்குமேல் போனதுதான் தாமதம்! அவன் தலை வெடித்துவிட்டது! தேவர்கள் பூமாரி பெய்து வாழ்த்தினர்கள்! வெற்றிப் பொலிவுடன், மோகினி நின்ருள்!

ஒரு பூவினுள் மறைந்து இருந்த பரமசிவன், பசுமாசுரன் இறந்ததும் வெளிவந்தார், தன்னைக் காப்பாற்றிய விட்டுணுவை வாழ்த்த வந்தார், மோகினியைப் பார்த்தார். அவருக்கு மோகம் பிறந்துவிட்டது. வழக்கம்போல் ஓடுதல், பிடித்தல், விளையாடுதல்—கூடுதல்—குழந்தை பிறந்தது. அரிக்கும் அரனுக்கும் பிறந்த குழந்தை அரிகரன் என்று அழைக்கப்பட்டான்.

பசுமாசுரனை அழிக்க, விட்டுணு மோகினி அவதாரமெடுத்து வந்ததாகச் சைவர்கள் கூறுவார்கள். ஆனல் பாகவத புராணத்தில் பசுமாசுரன் அழிந்த கதை வேறுவிதமாகக் கூறப்படுகிறது.

பசுமாசுரனுக்கு வரங்கொடுத்ததும், அவனிடமிருந்து தப்ப முடியாமல் சிவன் பாதாளத்துக் கடைசிவரை, வானத்துக் கடைசிவரை ஓடி, எங்கும் தப்ப முடியாமல், வைகுண்டத்துக்குப் போய் விட்டுணுவிடம் போய் அடைக்கலம் புகுந்தார். சிவபெருமானைக் காப்பாற்ற, விட்டுணு ஒரு பிராமண பிரமசாரிபோல வேடமிட்டு, பசுமாசுரனிடம் வந்தார்.

பிரமசாரியைப் பார்த்ததும், பசுமாசுரன் நின்ருர். பிராமணச் சிறுவன் அவனை ஆசீர்வதித்து "ஓ! அசுரனே! நீ மிகவும் களைப்படைந்து காணப்படுகிருயே, வெகுதூரத்திலிருந்து வருகிருயோ? எங்கு போகிருய், என்ன வேலையாகப் போகிருய்?" என்று கேட்டான்.

பசுமாசுரன் தன் வரத்தைப்பற்றியும். பரமசிவனைத் தேடிப் போவது குறித்தும் பிராமணச் சிறுவனிடம் கூறினன்.

சிறுவன் சிரித்தான். "பரமசிவனிடமிருந்தா? வரத்தையா? ஐயோ, பாவம்! அசுரனே, பரமசிவன் கொடுக்கிற வரத்துக்கு என்ன மகிமை யிருக்கிறது! பரமசிவன் யாருக்குக் கடவுள்? பிசாசுகளுக்கு, பூதங்களுக்குக் கடவுள்! அவரை நினைத்து நீ தவஞ் செய்தது வீண்; தவஞ் செய்ததுடன் அவர் தந்த வரத்தை வைத்துக்கொண்டு இப்படிச் சுற்றிக்கொண்டிருப்பது இன்னும் வீண்! பரமசிவன் வரத்துக்கு பலன் எதுவும் இருக்காது!"

பிரமசாரி சொல்வது உண்மைபோலிருந்தது. பசுமாசுரன் திகைத்து "பலன் இருக்காதா? பரமசிவன் வரத்துக்குப் பலம் இல்லையா?" என்ருன்.

"ஒன்றும் கிடையாது. உன்னை ஏமாற்றிவிட்டார். வேண்டுமானல் உன் தலைமீது உன் கையை வைத்துப் பார்! ஒன்றும் நடக்காது! பரமசிவன் சொன்னது பொய் என்பது புலனுகும்! அதன்பின் பொய் சொன்ன காரணத்தை வைத்து, பரமசிவனை நீ அழித்துவிடலாம்" என்று பிராமணச் சிறுவன்; மிக நல்லவன் போலப் பேசினன்.

பசுமாசுரன் கோபத்துடன் கையைத் தலைமேல் வைத்துப் பார்த்தான் தலை வெடித்துவிட்டது.

இது பாகவத புராணம் பத்தாவது காண்டத்தில்வரும் கதைகளில் ஒன்று மோகினியாக வந்தது, அரிகர புத்திரனைப் பெற்றது எல்லாம் இதில் இல்லை.

கவிதைப்பயன்

கவிதை இலக்கியத்தைத் தேங்காய் இலக்கியம், வாழை இலக்கியம், திராட்சை இலக்கியம் என்று மூவகையாகப் பிரிப்பதுண்டு. தேங்காயைப் பறித்த உடனே புசிக்க முடியாது; நார் உரித்து, உடைத்துக் கீறும்வரைக் காத்திருக்க வேண்டும். பொருள் விளங்காத சொற்களையும், வழக்கிலில்லாத சொல்லாட்சிகளையும் கொண்ட பண்டைய நூல்களை முதல் பகுதியில் சேர்ப்பார்கள். வாழைப் பழம் அவ்வளவு சிரமம் தருவதில்லை. தோலை உரித்துவிட்டு வாயில் போட்டுக் கொள்ள வேண்டியதுதான். மூன்ருவதாக, திராட்சையை எடுத்துக்கொண்டால், கைக்கு வந்த மாத்திரத்தில் அதன் சாற்றைச் சுவைத்துப் பசியாறிவிடலாம். சுலபத்தில் புரிந்துகொண்டு ரசிக்கக்கூடிய எளிமையான பாடல்கள் கடைசிப் பிரிவில் அமைகின்றன.

—குமுதம்

வெள்ளிக் கூசா

[கபிலன்]

குப்புக் குருக்கள், குருநாதப்பத்தர், ரங்கப் பிள்ளை மூவரும் நண்பர்கள். தினசரி, இந்த மூவரில் இருவராவது சந்திக்காமல் இருக்க மாட்டார்கள். ஒருவர் குடும்ப விவகாரம் பூராவும் மற்ற இருவருக்கும் நன்றாய் தெரியும். ஒருவரை ஒருவர் கலந்து கொள்ளாமல் எந்தக் காரியத்தையும் செய்யமாட்டார்கள்.

அந்த ஊரில் சிவன் கோயில் ஒன்று உண்டு. குப்புக்குருக்கள் இந்தக் கோயிலில்தான் பூசை செய்து வந்தார். 25 ஆண்டுகளுக்கு முன்பு நாட்டுக்கோட்டை செட்டியார் ஒருவர் வந்து சுமார் 40 ஆயிரம் ரூபாய் செலவில் இந்த சிவன் கோயிலுக்குத் திருப்பணிகள் செய்து குடமுழுக்கு செய்துவைத்தார். ரங்கப்பிள்ளை திருப்பணி செய்யும்பொழுது கணக்கப் பிள்ளையாகவும், குருநாதப் பத்தர், கோயிலுக்குத் தேவையான செப்புக் கலசங்கள், மற்றும் செம்பு; வெள்ளிப் பாத்திரங்கள் முதலியன செய்து கொடுக்கும் பொறுப்பை 'காண்ட்ராக்ட்'டாக ஒப்புக்கொண்டு--வேலை செய்து--ஏராளமாகப் பணம் சம்பாதித்ததாகவும் கிராமத்து மக்கள் பேசிக் கொள்வார்கள். குப்புக் குருக்களும் நாளாவட்டத்தில் நல்ல பணம் சேர்த்துவிட்டார் என்பது உண்மை.

இப்பொழுது இந்த மூன்று நபர்களும் பணக்காரர்கள். ஆனால் இவர்கள் ஒவ்வொருவரிடமும் எவ்வளவு ரொக்கப் பணம் இருக்கிறது என்பது எவருக்கும் தெரியாது.

ரங்கப் பிள்ளைக்கு, பிள்ளைகள் எதுவும் கிடையாது. அவர், அவர் மனைவி இரண்டே நபர்கள்தான் அவர் குடும்பம். பிள்ளை கடும் செட்டு. பெரிய லோபி என்பது பொது அபிப்பிராயம்.

குருநாதப் பத்தர், ரங்கப் பிள்ளையின் வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் குடியிருந்தார். பத்தருக்கு மனைவி—ஒரே மகள் மூவருமே குடும்பம் மகள் கோமளம் புத்திசாலி. நல்ல அழகு. தங்கச் சிலைபோல் வளர்ந்து வந்தாள். வயது 10-க்குமேல் ஆகிவிட்டது.

குருக்களும் மிகவும் செட்டுதான். ஆனால் அப்பாவி. குருக்களுக்கும் ஒரே பெண்தான். இம்மூவரில் பத்தர்தான் கொஞ்சம் தாராளமான மனம் படைத்தவர். ஆனால் நயவஞ்சகர்.

நாளாவட்டத்தில் ரங்கப்பிள்ளைக்குப் பொருமைக் குணம் வளர்ந்து வந்தது.

ரங்கப் பிள்ளை கண்ணில்பட்டது பாழாய்ப் போகும் என்ற நம்பிக்கை கிராமம் முழுமைக்கும் பரவி யிருந்தது. எல்லோரும் இவருடைய கண்பார்வையிலிருந்து தப்பவே முயற்சிப்பார்கள். ரங்கப் பிள்ளையின் 'கொள்ளி'க் கண்ணுக்கும், பொருமை எண்ணத்துக்கும் தப்பித்துக்கொண்டு பத்தர் எப்படி பக்கத்திலேயே குடியிருந்து வருகிறார் என்பதுதான் அந்த கிராமத்தில் எவருக்கும் புரியாத-ஆச்சரியமாக இருந்தது!

ஒரு சமயம் பத்தர் தன் மனைவியை அழைத்துக்கொண்டு வெளியூர் சென்று திரும்பினார்.

நடுப்பகல். ரங்கப்பிள்ளை சாப்பிட்டு விட்டுத் திண்ணையில் வந்து உட்கார்ந்துகொண்டிருந்த சமயம், பத்தர் ரயிலை விட்டு இறங்கி வண்டியில் வீட்டுக்கு வந்துகொண்டிருந்தார். வண்டி வீட்டுக்குச் சமீபம் வந்ததும் வண்டியில் உடன் உட்கார்ந்திருந்த தன் மனைவியைப் பார்த்து பத்தர்:

"பிள்ளை திண்ணையில் குந்தி யிருக்கிறான் குரங்கு மாதிரி—ஜாக்கிரதை. வைரத்தோடு, வெள்ளிக் கூசா இரண்டும் அந்தப் பாவியின் கண்ணில் படாமல் மறைத்துக்கொண்டு இறங்கிப் போ." என்றார்.

"எத்தனை நாளைக்குத்தான் பதுங்கிப் பதுங்கிக் காலந்தள்ளுவது' என்று எண்ணிச் சலித்துக்கொண்டாள் பத்தரின் மனைவி.

பத்தரின் எச்சரிக்கையை லட்சியம் செய்யாமல் மனைவி வெள்ளிக் கூசாவைப் பிள்ளையின் கண்ணில் நன்றாய் படும்படி 'காண்பித்து' எடுத்துக்கொண்டு வீட்டுக்குள் போய்விட்டாள்.

பத்தர் வீட்டு வெள்ளிக் கூசா, மெருகு கலையாமல் எதிர் வெய்யிலில் பளபளவென்று பிரகாசித்தது.

வெள்ளிக் கூசா பிள்ளையின் கண்ணில் படவே, பிள்ளை தனியே திண்ணையில் சாய்ந்து கொண்டு "வெள்ளிக் கூசாவா. பத்தப் பயலுக்கு வரவர பணத்திமிர் ரொம்பக் கொழுத்துப் போச்சு. வெளியூர் போய்வர வெள்ளிக் கூசாவா! இத்தனை நாள் எனக்குத் தெரியாதே! வெள்ளிக் கூசாவா இருக்கட்டும். பத்தனை மட்டம் தட்டி விடுகிறேன்" என்று எண்ணிக்கொண்டு, பொறாமை பொங்கி எழ வெறிபிடித்த நாயைப்போல் நிதானத்தை இழந்து உட்கார்ந்திருந்தார்.

இதற்குள் பத்தர் சாப்பிட்டுவிட்டு, வழக்கம் போல் 'தாராளமாக' வெத்திலை பாக்கு போட்டுக்கொண்டு, மிக நிதானமாகப் பிள்ளையின் பக்கத்தில் வந்து உட்கார்ந்தார்.

பத்தரைப் பார்த்த உடன் பிள்ளை புன்சிரிப்பை வரவழைத்தார். பிள்ளைக்கு எப்பொழுதும் பேச்சில் குளுமையும் நயமும் இழையவிடுவதில் திறமை அதிகம்.

பத்தர் தன்னிடம் சொல்லிக்கொள்ளாவிட்டாலும் "பெண்ணுக்கு மாப்பிள்ளை பார்க்கும் முயற்சியில் வெளியூர்போய் வந்திருக்கிறார் என்பது தனக்குத் தெரியும்."

என்ற விபரம் பத்தருக்குத் தெரியட்டும் என்று காட்டிக்கொள்ளும்வகையில் ரங்கப் பிள்ளை பத்தரைக் கேட்டார், "போன காரியம் முடிந்ததா? நிச்சயம்செய்யக்கூடுமா?" என்றார்.

பத்தர் மிகவும் வருத்தத்துடன் :

"எதிர் பார்த்தபடி நடக்காது போலிருக்கிறது. மாப்பிள்ளை வீட்டார் ஏராளமாகப் பணம் எதிர்பார்க்கிறார்கள்" என்று ஒரு பொய் சொன்னார்.

பத்தருக்கு இயற்கையாகவே நடிப்புத் திறன் உண்டு. பிள்ளையுடன் பழகிப் பழகி உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவதில் நல்ல தேர்ச்சியும் பெற்றிருந்தார்.

பத்தர் வீட்டுக் கலியாணத்திற்கு முதலில் ஒரு தடை என்பதை அறிந்து பிள்ளையின் மனம் கொஞ்சம் குளிர்ந்தது.

பத்தரின் புளுகு தனது அற்ப எண்ணத்திற்கு ஒத்து, மனதிற்கு குளுமையாக இருந்தமையால் பிள்ளை பத்தரின் வார்த்தையை அப்படியே நம்பினார். ஆனால் வெள்ளிக் கூசா மட்டும் பிள்ளையின் மனக்கண் முன்னால் வந்து நின்றுகொண்டேயிருந்தது.

பிள்ளை எப்படியும் வெள்ளிக் கூசாவைப் பார்த்திருப்பார் என்பது பத்தருக்குத் தெரியும்.

பிள்ளை மௌனமாக இருந்த சமயம் பத்தர் கேட்டார். "நம்ம வீட்டிலே வெள்ளிக் கூசா எடுத்துக்கொண்டு போனதை நீங்கள் பார்த்தீர்களா?"

பிள்ளை "உம்" என்று ஒரு முக்கு முக்கினார், உடன் வெளிவந்த பெருமூச்சில் பொறாமையின் வாசனை பத்தரின் மூக்குக்கு நன்றாய் தெரிந்தது.

"அது நம்முடையதல்ல"

"இரவல்" என்றார் பத்தர் ஏளனமாக.

"யாருடையது" என்றார் நளினமாக.

"நம்ம ஊரில்தான் ஒருவரிடமிருந்து இரவல் வாங்கினேன்."

பிள்ளைக்கு ஒன்றுமே புரியவில்லை. 'இந்த ஊரில் வெள்ளிக் கூசா வைத்திருக்கக் கூடிய அந்தஸ்து, பணம் வேறு யாரிடம் இருக்கிறது' என்று யோசித்தார், புலப்படவில்லை.

"ஒன்றும் புரியவில்லையே. உண்மையைச் சொல்லும்"

உடனே பத்தர் கீழ்கண்ட, உண்மை கொஞ்சமும் கலப்பில்லாத கட்டுக் கதையை எடுத்துவிட்டார்.

"நம்ப குப்புக் குருக்கள், யாருக்கும் தெரியாமல் வெள்ளிக் கூசா வாங்கி வைத்திருக்கிறார். அது எனக்கும் முதலில் தெரியாது. பிறகுதான் தெரிய வந்தது. அவரிடம் இரண்டொரு நாளைக்கு இரவலாகக் கேட்டு வாங்கி வந்தேன்"

பத்தர்சொல்லியதை அப்படியே நம்பி ரங்கப் பிள்ளை குப்புக் குருக்களைப்பற்றி யோசிக்கலானார்.

பிள்ளை யோசனையில் ஆழ்ந்திருப்பதைக் கவனித்த பத்தர் கேட்டார் "என்ன ஆழ்ந்த யோசனை"

"ஒன்றுமில்லை. குப்புக்குருக்கள் எனக்கு 50 ரூபாய் பணம் கொடுக்க வேண்டும். 6 மாதமாக சால்சாப்பு சொல்லி வருகிறார். தனக்கு அதிகமான பணமுடை என்றும் அவசியமான சிலவிற்குக்கூட பணமில்லாமல் அல்லல்படுவதாகவும், பஞ்சக் கோலம்போடுகிறார். இப்பொழுதுதான் தெரிகிறது வெள்ளிக் கூசா வாங்கப் பணம் இருக்கிறது கடன் வாங்கிய பணத்தைக் கொடுக்க மனமில்லை"

பத்தர் பாடு அதிகச் சங்கடமாகிவிட்டது. சொல்லிய பொய்யை மெய்ப்பித்துக் காட்டப்

பல பொய் தொடர்ந்து சொல்லித் தீர வேண்டிய இழி நிலைமை. ஒன்றுமறியாத குருக்கள் பக்கம் பிள்ளையின் கவனத்தைத் திருப்பி விட்டு விட்டமையால், இனி குருக்களையும் காப்பாற்றிவிட வேண்டிய பொறுப்பு பத்தரின் தோள்களில் வந்து சுமந்தது.

ரங்கப் பிள்ளை, எப்படியாவது, தந்திரமாக, பத்தர் வசம் இருக்கும் வெள்ளிக் கூசாவைக் குருக்களிடம் திரும்பப் போகாமல், தான் வாங்கி வைத்துக்கொண்டு குருக்களிடம் பணத்தை வட்டியும் முதலுமாக வசூலித்து விடலாமெனத் திட்டம் போட்டார்.

பத்தர் கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு வீட்டுக்குப் போய்விட்டார்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு தற்செயலாக குருக்கள் குருநாதப்பத்தரை சந்தித்து மாப்பிள்ளை வீடு பார்க்கப் போன விபரத்தை விசாரித்தார். குருக்களிடம் பத்தர் உண்மையைச் சொன்னார். "மாப்பிள்ளை பிடித்திருக்கிறது அநேகமாக இவ்வாண்டு கலியாணத்தை முடித்துவிட எண்ணியுள்ளேன்."

கொஞ்சநேரம் பேசிக்கொண்டிருந்து பிறகு மிக கவனமாய் பத்தர் சொன்னார்.

"சாமி! இரண்டு நாட்களுக்கு முன்பு ரங்கப் பிள்ளையிடம் பேசிக்கொண்டிருக்கும்போது தங்களிடம் உள்ள வெள்ளிக் கூசாவை......

குருக்கள் தேள் கொட்டியதைப்போல் திடுக்கிட்டு "அட பாவி! என்னிடம் வெள்ளிக்கூசா இருக்கும் விபரம் அவனுக்கு எவ்வாறு தெரிந்தது நான் வெள்ளிக்கூசா, வாங்கி வந்திருப்பது யாருக்கும் தெரியாது என்றல்லவா எண்ணி யிருந்தேன். ரங்கப் பிள்ளைக்கு இது எப்படித் தெரிய வந்தது"

பத்தருக்கு குருக்கள் வெள்ளிக் கூசா வாங்கி வைத்திரும் விஷயம் இப்பொழுது தான் தெரிய வந்தது.

தான் பிள்ளையிடம் சொல்லி வைத்த பொய்யில் கொஞ்சம் உண்மையும் கலந்திருக்கிறதென்பது பத்தருக்குத் தெரிந்தது.

"விபரம் பூராவும் தெரிந்து கொள்வதற்குள் அவசரப்படாதேயும். உங்களிடம் இருக்கும் வெள்ளிக் கூசாவை இரண்டு மூன்று நாளைக்கு இரவலாக வாங்கி வர வேண்டுமென்று ரங்கப் பிள்ளை சொல்லிக் கொண்டிருந்தார். ஒருக்கால்கேட்டு உங்களைத் தொல்லை கொடுப்பதற்கு முன் முன்னேற்பாடாக ஏதாவது செய்துவையும். அதற்காகத்தான் இதை உம்மிடம் சொல்வது" என்று பத்தர் கூறியதைக் கேட்ட குருக்கள் மனம் பதறி,

"பத்தரே! நீர்தான் எனக்கு ஒரு யோசனை சொல்ல வேண்டும். நான் பிள்ளைக்கு 50 ரூ. பணம் கொடுக்க வேண்டும். அதை அடிக்கடி கேட்டுத் தொந்தரவு கொடுத்துக்கொண்டு வருகிறார் இரண்டு மாதமாக. வெள்ளிக் கூசா அவர் கைக்குப் போனால் கடனுக்காக எடுத்துக்கொண்டேன் போ" என்று கூசாமல் கூறி விடுவார்" என்றார்.

"சாமி! பயப்பட வேண்டாம். பிள்ளை கூசாவை இரவல் கேட்டால், கூசாவை என்னிடம் இரவல் கொடுத்திருப்பதாகச் சொல்லி விடும்"

"உம்மை, இது உண்மைதானா" என்று பிள்ளை கேட்டுவிட்டால்...

"ஆமாம் என்று சொல்லி விடுவேன்"

"பத்தரிடம் கூசாவை வாங்கிக் கொடு என்று என்னை வற்புறுத்தினால்...?"

"என்னிடம் சொல்லும் மேற்கொண்டு யோசனை நான் சொல்லித் தருகிறேன்" என்று சொல்லி மேலும் பத்தர் சொன்னார்,

"இனி கொடுக்க வேண்டிய பணத்தை உடனே கொடுத்துவிடும். இதில் காட்டும் கஞ்சத்தனம் உம்முடைய சொத்துக்கே ஆபத்தைக் கொண்டு வந்துவிடும். நாளைய தினமே கைமாத்து ரூபாய் 50 கொடுத்தால்தான் நீர் பிழைத்தீர்"

"பத்தரே நல்ல யோசனை சொன்னீர். நான் நாளைய தினம் 50 ரூபாயும் அதற்குள்ள வட்டியும் கொண்டுவந்து உம்மிடம் கொடுத்து விடுகிறேன். நீரே பிள்ளையிடம் கொடுத்துக் கணக்கைத் தீர்த்துவிடும். அந்தக் கிராதகன் முகத்தில் விழிக்கவே எனக்குப் பயமாகவிருக்கிறது."

மறுநாள், சொல்லிப் போனபடி குருக்கள் 50 ரூபாயும் 5 ரூ. வட்டியும் கொண்டுவந்து பத்தரிடம் கொடுத்துவிட்டு, பிள்ளையின் கண்ணில் படாமல் போய்விட்டார்.

குருக்கள் போய்விட்ட பிறகு பத்தர் 55 ரூ. பணத்தை எடுத்துப் போய் பிள்ளையைக் கூப்பிட்டு அவர் கையில் 55 ரூ. பணத்தைக் கொடுத்து "பிள்ளைவாள்! குருக்கள்பணத்தை வைத்துக்கொண்டு சால்சாப்பு சொல்வதாக சொன்னீரே, நான் ஒரே ஒரு வார்த்தையில் கேட்டு அனுப்பி, கையொடு பணத்தை வட்டி

யும் முதலுமாக வசூலித்து விட்டேன் பாரும்'' என்றார்.

பணத்தை எண்ணி பத்திரமாக மடியில் வைத்துக்கொண்டு சிரித்துக் கொண்டே பிள்ளை சொன்னார். "ஓய் பத்தரே! பணத்தை வசூலித்தது நீரல்ல. அந்த வெள்ளிக் கூசா. வெள்ளிக் கூசா உம்மிடம் வந்து சிக்கி அது விபரம் எனக்குத் தெரிந்த காரணத்தால்தான் குருக்கள் பெட்டியில் இருந்து பணம் வெளியில் வந்தது.''

பணத்தைக் கொடுத்த உடன் வெள்ளிக் கூசாவைக் குருக்களிடம் கொடுத்து விட்டதாக மேலும் ஒரு பொய்யை சொல்லிவிட்டு பத்தர் வீட்டுக்கு வந்துவிட்டார்.

ஒரு ஆண்டு கடந்தது. குருக்கள் பெண்ணுக்குக் கலியாணமாகிவிட்டது. பெண் கணவன் வீட்டுக்குப் போகும்பொழுது எடுத்துச் சென்ற பாத்திர பண்டங்களுடன் வெள்ளிக் கூசாவும் வெளியூர் போய்விட்டது.

பத்தரின் பெண்ணுக்குக் கலியாணம் ஆகவில்லை இரண்டு ஆண்டுகள் தாண்டித்தான் கலியாணம் ஆக முடியும் என்று உள்ளூர் குருக்கள் சாதகம் பார்த்துக் கண்டு பிடித்ததை வெளியூர் சாதக நிபுணர்கள் ஊர்ஜிதம் செய்தமையால், நடைபெற வேண்டிய பத்தர் பெண்ணின் கலியாணம் இரண்டு ஆண்டுகளுக்கு ஒத்திப் போடப்பட்டது.

பெண்ணின் கலியாணத்தைப்பற்றிய கவலை இரண்டு ஆண்டுகளுக்கு இல்லாமற் போகவே பத்தர் ரங்கப் பிள்ளையை மட்டம் தட்டத் திட்டமிட்டார்.

ஒருநாள் வெள்ளிக் கூசாவை எடுத்து நன்ருகத் துடைத்து மெருகு கொடுத்துவைத்துவிட்டு பிள்ளையின் வீட்டுக்குப் போனார். முன்புறம் பின்புறம் வீட்டுக் கதவுகள் திறந்திருந்தன. பிள்ளையும் அவர் மனைவியும் கொல்லைப் புறத்தில் வேலைசெய்துகொண்டு இருந்த ஆட்களுக்குக் காவலாய் எதையும் திருடிக் கொண்டு போய்விடாமல் இருந்தார்கள். பத்தர், எதிர்பார்த்திருந்த தக்க சமயம் வாய்த்தது என்று எண்ணி வீட்டுக்கு விரைந்து சென்று வெள்ளிக் கூசாவை ஒரு கந்தல் துணியால் நன்ருய் மறைத்து ஒரு மூட்டையாகக் கட்டி, தூக்கிக் கொண்டு வந்து பிள்ளை வீட்டுத் திண்ணையில் ஒரு மூலையில் வைத்துவிட்டு வந்துவிட்டார்.

அன்று இரவு 8 மணி சுமாருக்குப் பத்தர் பிள்ளை வீட்டுத் திண்ணையில் வந்து உட்கார்ந்தார்—பார்த்தார் மூட்டையைக் காணவில்லை போட்ட திட்டம் சரிவர நிறைவேறி விட்டதை அறிந்து அகமகிழ்ந்தவராய் பத்தர் பிள்ளையின் வரவை எதிர்நோக்கி யிருந்தார். பிள்ளை வெளியே வந்து உட்கார்ந்துகொண்டு பத்தருடன் பேசிக்கொண்டிருந்தார். பிள்ளையின் குரலில் சந்தோஷமும் முகத்தில் தெளிவும் இருந்தது. எழுந்து போகும்பொழுது பத்தர்.

"சற்று முன்பு திண்ணையில் பிச்சைக்காரன் ஒருவன் படுத்திருந்தான். நான் அதட்டி எழுந்து போகும்படி சொன்னேன். அதற்கு அவன் கொஞ்சம் மயக்கமாக இருக்கிறது அதனால்தான் இங்கு வந்து படுத்தேன். கொஞ்சநேரத்தில் என்னுடைய சோத்து மூட்டையை எடுத்துக்கொண்டு போய் விடுகிறேன் என்ருன்—தொலையட்டும் என்று போய்விட்டேன்'' என்ருர்.

ரங்கப் பிள்ளை புளுகினார். 'நான் வந்து பார்த்தபொழுதும் படுத்திருந்தான். "விரட்டி அடித்து துரத்திவிட்டேன்'' மூட்டையை எடுத்துக்கொண்டு போய்விட்டான்''.

வெள்ளிக் கூசா மூட்டை பிள்ளையின் வீட்டுக்குள் போய்விட்டதைத் உறுதி செய்து கொண்டு பத்தர் போய்விட்டார்.

ஒருவாரம் சென்றது. ஒருவரும் மூட்டையைத் தேடி வராததால் வெள்ளிக் கூசாவைத் தேடிக்கொண்டு தன்வீட்டுக்கு இனியாரும் வர மாட்டார்கள். அப்படி யாரேனும் வந்தால்—பரதேசிக்கும் சோத்துமூட்டைக்கும் பத்தர் சாட்சி யிருக்கிறார் என்று மனதைத் தேற்றிக் கொண்டார் பிள்ளை. ஆனால் மறுகணம் 'எவனேனும் வெள்ளிக் கூசாவைத் திருடி இங்கு கொண்டுவந்து வைத்துவிட்டுப் போய்விட்டானோ' என்று எண்ணினார்.

பத்தர் திட்டப்படி மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுக்கலானார்.

ஒரு நாள் மாலை ஒரு போலீஸ் சேவகன் ஒரு பிச்சைக்காரனை அழைத்துக்கொண்டு பிள்ளையின் வீட்டுக்கு வந்தான் : போலீஸ் சேவகனையும் பிச்சைக்காரனையும் பார்த்தவுடன் ரங்கப் பிள்ளை கதி கலங்கிப்போய் திகைத்து நின்ருர். இனி, தப்ப வழியில்லை உண்மையைச் சொல்லி போலீஸ் காரனைத் தன்னக்கட்டி அனுப்பிவிடுவதுதான் வழி என்று ரங்கப்பிள்ளை கலங்கிய கண்களுடன் போலீஸ் சேவகனைப் பார்த்து வீட்டுக்குள் வாருங்கள் என்று அழைத்து. இரகசியமாகச் சொன்னார். "வீட்டுத்திண்ணை

யில் வெள்ளிக் கூசா மூட்டையில் கட்டி வைக் கப்பட்டிருந்தது. யாரும் தேடிக்கொண்டு வராததால் எடுத்து உள்ளே வைத்திருக் கிறேன். கொடுத்து விடுகிறேன். தங்களுக்கு 50ரூ கொடுக்கிறேன். என்னை விட்டு விடுங் கள்" என்று கெஞ்சும் குரலில் கேட்டார்.

"சரி! எடும் சீக்கிரம்" என்று அதட்டினன் போலீஸ் சேவகன்.

ரங்கப்பிள்ளை தன்னுடைய அறைக்குள் போய் அலமாரியைத் திறந்து பார்த்தார். அதில் ரங்கப்பிள்ளைக்கு கோவில் திருப்பணி செய்த நாட்டுக்கோட்டைசெட்டியார் இனும் கொடுத்த வெள்ளிக் கூசாவும், திண்ணையி லிருந்து எடுத்த புதிய வெள்ளிக் கூசாவும் இருந்தன. ரங்கப் பிள்ளைக்குப் புதிய கூசாவை எடுத்துக் கொடுக்க மனம் வரவில்லை. அழுக் கடைந்திருந்த வெள்ளிக் கூசாவை எடுத்துக் கொண்டுவந்து போலீஸ் சேவகனிடம் கொடு த்து கையில் 50 ரூ. பணத்தையும் கொண்டு வந்து கொடுத்தார். போலீஸ் சேவகன் வெள்ளிக் கூசாவை எடுத்துக்கொண்டு கிளம் பினன். ரெங்கப்பிள்ளை கேட்டுக் கொண் டார். "இது விஷயம் யாருக்கும் தெரியவேண் டாம். பக்கத்து வீட்டுக் குருநாத பத்தருக்கு தெரியக்கூடாது"

"பிள்ளைவாள்! பயப்படாதீர்கள் நான் யாரிடமும் சொல்லவேமாட்டேன்" என்று போலீஸ் சேவகன் உத்திரியம் சொல்லிவிட்டுப் போனான்.

மறுநாள் இரவு போலீஸ் சேவகன் வெள்ளிக் கூசாவை எடுத்துக் கொண்டுவந்து பத்தரி டம் கொடுத்து நடந்த விபரங்களையும் தனக்கு ரங்கப்பிள்ளை ரூ 50 லஞ்சம் கொடுத்ததையும் விபரமாகச் சொன்னன்.

விடைபெற்றுக்கொண்டு போகும்போது போலீஸ் சேவகன் சிரித்துக்கொண்டு சொன் னன். "பத்தரே நீர் பலே பேர் வழி என்னு டைய சர்வீசிலே இப்படிப்பட்ட ஆசாமியை நான் பார்த்ததே இல்லை. நல்ல திட்டம் போட்டீர், நல்லா வந்து மாட்டினன் ரங்கப் பிள்ளை உம்மிடம்."

பத்தரின் ஆனந்தத்திற்கு அளவே இல்லை. வந்திருக்கும் வெள்ளிக் கூசா நாட்டுக் கோட் டை செட்டியார் ரங்கப்பிள்ளைக்கு அன்பளிப் பாகக் கொடுத்த கூசா என்பதைப் பார்த்த உடன் தெரிந்து கொண்டார் பழய கூசாவை நன்ருய் தேய்த்துப் புதுதாக மெருகு ஏற்றி வைத்துக் கொண்டார் பத்தர். ஆறுமாதத் திற்குப் பிறகு ஒரு நாள் ரங்கப்பிள்ளை அலமா ரியைத் திறந்து வெள்ளிக் கூசாவை வெளியே எடுத்தார் பூசப்பட்டிருந்த வெள்ளி முலாம் எல்லாம் கருத்து, பித்தளை கூசா சுய உருவத் தைக் காட்டியது ரங்கப்பிள்ளை தலையிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டார்.

★

எடிசன்

இரயில் வண்டியில் பத்திரிக்கைகள் விற்கும் பையனுகப் பணியாற்றும் பொழுது, இரயிலிலேயே ஒரு ஆய்வுச் சாலையையும் சிறிய அச்சு இயந்திரத்தையும் தோற்றுவித்து ஓய்வு நேரங்களில் ஆராய்ச்சி செய்து வந்தார். ஆராய்ச்சிப் பொருள் வாங்குவதற்குத் தேவையான பணத்தையும் தானே தேடிக்கொள்ளும் பொருட்டு தான் வேலை பார்க்கும் இரயில் நிற்கும் கடைசி நகரில் பழம், காய்கறிகள் விற்கும் கடை ஒன்றைத் தோன்றுவித்து அதை நடத்துவதற்கு ஒரு பையனை வேலைக்கு அமர்த்திக் கொண்டார். கடைக்கு வேண்டிய காய்கறி, பழங்களை இரயி லில் கட்டணமின்றி தானே எடுத்துச் சென்று கொடுத்து வந்தார். இவ்வியா பாரத்தில் ஏராளமாகப் பணம் சேர்ந்து அவர் ஆராய்ச்சிக்குத் தாராளமாக உதவியது!

சோழர்கள் கண்ட காழகம்

(புகழேந்தி கரிகாலனார்)

மலாய் நாட்டின் மேல்கரையில், தென்பக்கத்தில், இன்று கெடா(1) என்னும் பெயரமைந்து விளங்கும் மாநிலம், சோழ நாட்டு வரலாற்றிலும், கடைக்காலத் தமிழ்ப் பேரிலக்கியங்களிலும் காழகம்(2) என்றழைக்கப்படும் தமிழ் மாநகரமேயாகும். விசயப் பேரரசு அருமண நாடு, கம்போசம், ஈழமண்டலம், மலாய்நாடு, மாநக்வார தீவுகள், சாவகம் முதலாய நாடுகளைக் கைப்பற்றி ஆண்டபொழுது, சூளாமணி வர்மன் என்ற பெயருடைய அரசன் காழகத்தைத் தனது மேலாண்மைக்குக் கீழ் வைத்திருந்தான். (3) இவன், நாகபட்டினத்தின்கண் பௌத்தாலயம் ஒன்றைக் கட்டத் துவங்கி முற்றுப் பெருமல்விட்டான் என்று வரலாறு கூறுகிறது.

சூளாமணி வர்மனுக்குப்பிறகு காழகத்தை அவன் மகன் விசயோத்துங்கவர்மன் ஆளலானான். நாகபட்டினத்தில் தனது தந்தையால் துவங்கப்பெற்று முற்றுப் பெருமல் இருந்த பௌத்தாலயத்தை இவன் கட்டி முடித்தான். (4) இவனுடைய ஆட்சிக்காலம் முடிவடைந்ததும் இவன் மகன் சங்கிராம விசயோத்துங்கவர்மன் காழகத்து மன்னனாக முடியணிந்தான்.

கடற்கரையில் அமைந்திருந்த காழகத்தை இவன் கடாரம் என்ற பெயரில் அழகிய நகரமாகச் சீராக்கினான். தமிழ் நாட்டு வாணிகக் கலங்கள் அணிவகுத்து நிற்பதற்கும், சீன தேயத்து வாணிகக் கலங்கள் வந்து நிற்பதற்கும் கடாரத் துறைமுகத்தை நன்றாக விரிவுபடுத்திக் கட்டினான். இங்கு வரும் வாணிக மக்கள் தங்குவதற்குரிய இருக்கைகள் பல இருந்தன. வழிபாடு நிகழும் கோவிலும், மக்கள் வதியும் சிறிய வீதிகளும் அமைய, கடற்கரைப் பட்டினமாக விளங்கிய கடாரத்தைக் கண்ட தமிழ் கல்விமன்னர்கள் "பரக்குமோதக் கடாரம்" (5) என்றும், "குன்று-தொண்டிரைக் கடாரம்" (6) என்றும் பாராட்டி மகிழ்வாராயினர்.

இவ்வாறு நலம் பொருந்தி விளங்கிய கடாரத்தைத் தமிழ் நாடும் அறிந்து உறவு கொண்டிருந்தது. சங்கிராம விசயோத்துங்கவர்மனும், இராசேந்திர சோழனும் நட்புறவு கொண்டு நெருங்கிப் பழகினர். (7) இவர்களின் நட்புறவு நெடுங் காலம்வரை நீடித்திருக்கவில்லை. சிலகாலத்திற்குள் இருவரும் பகைமை கொண்டு போர் நிகழ்த்தத் துவங்கினர். இப் பகைமை வளர்ந்து போர் வடிவம் பெறுவதற்குக் காரணம், மக்களின் வாணிக வளர்ச்சியே என்பது தமிழாய்வுத்துறை விரிவுரையாளர் தோழர் சதாசிவ பண்டாரத்தார் அவர்களின் கருத்தாகும்.

இராசேந்திரனுக்குச் சிறந்த கடற்படை இருந்தது. அன்று கடல் கடந்து பகை நாட்டைத் தாக்குவது நெருக்கடியான நிகழ்ச்சியாக இருந்தும், இவன் மனம் நெகிழ்ந்து விடாமல் கடாரம் நோக்கிக் கடற்படைகளோடு புறப்பட்டான். (8) இவனுடைய கடற்படைக்கு விக்

---

1. Ep-Ind., Vol. XX11, Page 282.
2. பட்டினப்பாலை வரி—*191.*
3. History of the later cholas., Part-1 Page 127.
4. Ep: Ind., Vol XXII, No 34.
5. கலிங்கத்துப் பரணி பா-*138.*
6. கலிங்கத்துப் பரணி பா-*189.*
7. The larger kingdom of Rajaraja I., Ep-Ind; Vlo-XXII, No 34.
8. இப்போரைப்பற்றி திருவாலங்காட்டு செப்பேடுகள் கூறுகின்றன என்பர்.

கிரமசோழ சோழியவரையனாகிய அரையன் இராசேந்திரன் என்ற சிறந்த படைத்தலைவன் தலைமை ஏற்றிருந்தான். இப்படைத் தலைவன் உள்ள உறனும், உடல் வலிவும் பெற்று விளங்கியதோடு, காலம், நிலை அறிந்து போர் செய்யும் வல்லமையும் பெற்றிருந்தான். கடாரம் நோக்கி வந்த கடற் படையை எதிர்த்துச் சங்கிராமவர்மன் போர்புரிந்தான். கடற்படை, கரைவரை சென்று கடாரப் படையைப்பிளந்து கொண்டு போரிட்டது. இப் போரில் இராசேந்திர சோழனின் கடற்படையே வென்றது. இத்தகு போர் நிகழ்ந்த காலம் கி. பி. 1025ஆம் ஆண்டு என்பர் வரலாற்றாசிரியர்கள்.

கடாரத்தைப் பணிய வைத்த இராசேந்திர சோழன், சங்கிரம விசயோத்துங்கவர்மனின் பட்டத்து யானையையும், விஞ்சைய தோரணத்தையும் கவர்ந்து, மலையூர், மாயிருடிங்கம், (9) இலங்கசோகம் முதலாய பகுதிகளையும் தனது மேலாண்மைக்குக் கீழ் அடக்கி ஆண்டான். (10) இதற்கு முன் இவன் கங்கை கொண்டான் என்ற சிறப்புப் பெயரையும் பெற்றிருந்தான். இவனது கடாரப் படை எழுச்சியைப் போற்றிக் "கடாரங் கொள்ளுமொரு சோழன்" என்று கூறும் தமிழ் ஏடுகள். (11)

இராசேந்திர சோழன் மேலாண்மைக் கீழ் அடங்கிய பிற நாடுகளுடன் போர் நிகழ்த்த வேண்டிய இன்றியமையாமை ஏற்படவே, இவன் அப் போர் நிகழ்ச்சிகளில் நேரில் கலந்து கொள்ளாமல் தனது முதல்மகனாகிய இராசாதிராசனைக் கலந்து கொள்ளுமாறு செய்தான். பிறகு நெடுங்காலம்வரை இராசாதிராசனே தனது தந்தையின் மேலாண்மைக்குக் கீழ் அடங்கிய நாடுகளை ஆளலானான். இவனது ஆட்சிக்காலம் முடிவுற்றதும், இவன் சகோதரனும், இராசேந்திர சோழனது புதல்வர்களுள் ஒருவனுமாகிய வீரராசேந்திர சோழன் முடியணிந்தான். இவன் காலத்தில் கடாரத்தை ஓர் அரசன் ஆண்டு கொண்டிருந்தான். அப்பொழுது கடாரம் வீரராசேந்திர சோழனுக்கு கீழ்ப் பட்டிருக்கவில்லை. ஆனால் நட்புறவு இருந்திருக்கலாம். பிறிதொருபொழுது பிற நாட்டரசன் கடாரத்தைக்கவர்ந்து கொள்ளவே கடாரத்தரசன் வீரராசேந்திர சோழனிடம் அடைக்கலம் புகுந்தான். நாடு இழந்து சோழநாட்டில் வந்து அடைக்கலம் புகுந்த கடாரத்தரசனைத் தமிழ் மன்னன் அணைத்து ஆறுதல் உரைத்தான், நாட்டையும் வென்று தருவதாக உறுதி கூறினான். உடனே வீரராசேந்திர சோழன் தன் படைகளையனுப்பிக் கடாரத்தை வென்று அவ்வரசனுக்கு அளிக்குமாறு அனுப்பினான். (12) இப் போரில் வீரராசேந்திர சோழன் தங்கையின்புதல்வன் முதற்குலோத்துங்க சோழனும் கலந்து கொண்டு கடாரத்தை வென்று அளித்தான். (13) வீரராசேந்திர சோழனின்பெருந்துணையாலும், முதற்குலோத்துங்க சோழனின் உறுதுணையாலும், சோணாட்டுப்படைகளின் நற்றுணையாலும், கடாரத்தை மீண்டும் பெற்று வாழ்ந்தான் நாடிழந்த கடாரத்து அரசன். வீரராசேந்திர சோழனோடு சோழர்களின் காழகத்து வரலாறு ஒருவாறு முடிவுற்றது எனலாம்.

---

9. சீன நாட்டவர் இதனை ஜிலோடிங் (Ji-Lo-Ting) என்று வழங்கினர் என்பர்.
10. History of the later cholas; Part-1 Page 173.
11. "களிறு கங்கைநீ ருண்ண மண்ணையில்
காய்சினத் தொட கலவு செம்பியன்
குளிறு தொண்டிரைக் குரைக டாரமுங்
கொண்டு மண்டலங் குடையுள் வைத்ததும்" —கலிங்கத்துப்பரணி.

"கங்கா நதியும் கடாரமுங் கைகொண்டு
கங்கா புரிபுக்த கற்பகம்" —விக்கிரமசோழன் உலா, வரிகள் 34-36.

"கங்கா நதியுங் கடாரமுங் கைகொண்டு
சிங்கா தனத்திருந்த செம்பியர் கோன்"
—குலோத்துங்க சோழன் உலா, வரிகள் 49-50.

12. S-I-L., Vol, No. 468-Ep-Ind, Vol. XXV, Page 263.
13. History of the later cholas; Part-1 Page 241.

வருந்துவதைத்தவிர வழி இல்லை!

[இரா. நெடுஞ்செழியன்]

மணமாகிச் சிறிதுகாலம் வரையில், இல்லற இன்பத்தில், இணையிரியாது திளைத்துக் கிடக்கின்றனர் தலைவனும் தலைவியும்.

திரட்டி வைத்திருந்த செல்வம், நாள் செல்லச் செல்ல சிறிது சிறிதாகக் குறையத் தலைப்படுகிறது. செல்வம் குறைவது தலைவனுக்குச் சிறிது கவலையைத் தருகிறது. எதிர்காலத்தை இன்பகரமாக நடத்தக் கையகத்திருக்கும் பொருள் போதுமானதாக இராது என்று கருதி, முழுப்பொருளும் கரைவதற்குள் மிகுபொருள் தேடிக்கொண்டு வந்து தீர வேண்டும் என்ற முடிவுக்குத் தலைவன் வருகிறான். பொருள் தேட வேண்டுமானால் வேற்றூருக்குச் சென்று வாணிகமோ, அல்லது தொழிலோ செய்துதான் தீரவேண்டும். இந்த நிலையில் தன் அருமைக் காதலியிடம் எப்படிப் பிரிவை உணர்த்துவது என்று எண்ணி எண்ணித் தவிக்கிறான். இறுதியில் தன் முடிவை ஒருவாறு தலைவியிடம் மெல்ல அறிவிக்கிறான். தலைவியும் தலைவனது பிரிவைக் கருதி முதலில் கலக்கங்கொண்டு, பின்னர் நிலைமையை எண்ணித் தலைவனது முடிபுக்கு இசைவு தருகிறாள்.

தலைவன் கார்காலம் துவங்குவதற்கு முன்னால் தான் இல்லம் திரும்பி வந்து விடுவதாக வாக்குறுதி கொடுத்துவிட்டு வெளியூருக்குப் புறப்படுகிறான். தலைவி மனவருத்தத்துடன் அருமைக் காதலரை வழியனுப்பி வைக்கிறாள்.

தலைவனைப் பிரிந்த தலைவி பிரிவாற்றாது மிகவும் வருந்துகிறாள். வருத்தத்தை மறக்க வேறுவேறு அலுவல்கள்மீதும், பொருள்கள் மீதும், வேடிக்கை விளையாட்டுக்கள் மீதும் தன் கவனத்தைத் திருப்ப முயலுகிறாள். தோழியோடு ஓடிவிளையாடுதல், மலைவளங் காணச் செல்லல், நீராடப் போதல், பூப் பறித்து மாலை தொடுத்தல், பந்து விளையாடுதல், ஊஞ்சல் ஆடுதல், பாட்டுப் பாடுதல், கதை சொல்லல்—கேட்டல் முதலானவற்றிலே காலத்தைப் போக்கிக்கொண்டு வருகிறாள். இடையிடையே தலைவனைப்பற்றிய நினைவு வரும்போதெல்லாம் வருந்துவாள். தோழி அருகிருந்து ஏதேனும் ஆறுதல் மொழி கூறித் தேற்றுவாள்.

தலைவன் தான் திரும்பி வந்து விடுவதாக உணர்த்திச் சென்ற காலத்தை மிக ஆவலோடு தலைவி எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறாள். ஒவ்வொருநாளும் மறையும்போது மொத்த நாட்களில் ஒருநாள் கழிந்தது, ஒரு நாள் கழிந்தது என்று நாட்களைக் கழித்துக் கணக்குப் போட்டுக்கொண்டு, தலைவனது வருகை நாளையும், அவனை வரவேற்கும் விதத்தையும், அவனோடு கூடிக்குலாவும் தன்மையையும் எண்ணி எண்ணி உள்ளுக்குள்ளேயே ஒருவித மகிழ்ச்சியை வரவழைத்துக் கொள்வது அவளது பழக்கமாக இருந்துவருகிறது.

தலைவன் உணர்த்திவிட்டுச் சென்ற கார்காலம் நெருங்குவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. குளிர்ந்த வாடைக் காற்று மெல்ல வீசத் தொடங்குகிறது. கார்காலத்துப் பயிர் செழித்து வளர ஆரம்பிக்கின்றன. கார்காலத்துப் பூவினங்கள் அரும்புவிடத் தொடங்குகின்றன. கல்வி கற்க வேண்டியும், போரிடுதற் பொருட்டும், பொருள்தேடும் நிமித்தமும் வெளியூர்களுக்கும், வெளிநாடுகளுக்கும் சென்றிருந்த அண்டைவீட்டு ஆடவரும், அயல்வீதி ஆடவரும் ஒவ்வொருவராகத் திரும்பிவரத் தலைப்படுகின்றனர். மக்கள் எல்லோரும் கார்காலத்துக்கு வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகளையெல்லாம் செய்துகொள்ள முனைகின்றனர். வீடுதோறும் உள்ள வயது முதிர்ந்த பெண்டிர், கார்காலம் முழுவதிற்கும் வருமாறு திரட்டி வைத்துக்கொள்ள வேண்டிய அரிசி, உப்பு, பருப்பு, விறகு போன்ற சமையலுக்கு வேண்டிய பண்டங்களையெல்லாம் ஒன்று சேர்ப்பதில் ஈடுபடுகின்றனர். வானில் முகிற் கூட்டங்கள் திரண்டு கறுத்து நின்று, மழை பொழிவதற்கான முறையில் இடிகளை எழுப்புகின்றன. இவற்றை

யெல்லாம் கண்ட தலைவி, தன் அருமைக் காதலர் எப்படியும் இரண்டொரு நாட்களில் வந்து விடக் கூடும் என்று எண்ணி, குதியாட்டம் போட்டுக்கொண்டு, ஆவலோடு வழிமேல் விழிவைத்துப் பார்த்துக்கொண்டிருக்கிறாள். வரும் காதலரை வரவேற்பதற்குத், தலைவி தன்னை ஆடை அணிகலன்களால் அழகு படுத்திக்கொண்டும், இல்லத்தைப் பொலிவுறக் காட்ட ஒழுங்குபடுத்திக்கொண்டும் இருக்கிறாள்.

தோழி, தலைவர் வந்துவிட்டாரா என்று பார்ப்பதற்காக வாயிலில் வந்து நீண்டநேரம் நிற்பதும், வழிகளை உற்று நோக்குவதும், உள்ளே செல்லுவதும், மீண்டும் வாயிலண்டை வருவதும் ஆன செயல்களில் தொடர்ந்து ஈடுபட்டுக்கொண்டிருக்கிறாள்.

தலைவன் குறிப்பிட்டுச் சென்ற நாளும் வந்து, செல்கிறது. கார்காலம் வந்துவிட்டது என்பதை உணர்த்துவதைப்போல் இரண்டு மூன்று மழைகளும் பெய்கின்றன. கார்காலத்து மலர்கள் எங்கணும் பூத்துக் குலுங்குகின்றன. கார்காலம் தொடங்கிச் சிலநாட்கள் ஆயின. பிறகும் தலைவன் வராதது கண்டு, தலைவி உள்ளம் உடைந்துபோய், ஏமாற்றத்துடன், மனங்குழம்பி வருந்தி வருந்தி அழுது கொண்டிருக்கிறாள். தோழி எவ்வளவோ ஆறுதல் மொழிகள் கூறிப் பார்க்கிறாள். இது காறும் அவைகளைக் கேட்டுக் கேட்டு ஒருவாறு ஆறுதல் அடைந்து வந்த தலைவி, இப்பொழுது எவ்வகையிலும் ஆறுதல் அடைய முடியாதவளாகிப் பெரிதும் வருந்துகிறாள்.

தலைவியின் கண்களில், நீர், முத்துக்கள் போல், ஒன்றன்பின் ஒன்றாகக் கொப்பளித்து, உருண்டோடி வந்து விழுந்து கொண்டிருக்கின்றன. தலைவியின் நினைவு களவொழுக்கக் காலத்திலும், மணமான பிறகும்தான் தலைவனோடு கூடிக்குலாவி யிருந்து நுகர்ந்த இன்ப நாட்களிலே பதிகின்றது. பகற்குறி—இரவுக் குறி யிடங்களில் ஆடிப்பாடி மகிழ்ந்திருந்த நிலையையும், புனல் நீராடியதையும், ஊஞ்சல் ஆடியதையும், பந்து விளையாடியதையும், இவை போன்ற பலவற்றையும் எண்ணி எண்ணி, அந்த நிலைமைகள் மீண்டும் வாய்க்கப் பெறாமல் போய்விடுமோ என்று கருதி ஏக்கங் கொள்கிறாள். தோழி, தலைவியின் நிலை கண்டு பெரிதும் இரக்கங் கொள்கிறாள்.

"ஏன் இப்படி அழுதுகொண்டிருக்கிறாய்? அழுதுகொண்டிருந்தால் அவர் வந்து விடுவாரோ?" என்று தோழி தலைவியைப் பார்த்து இரங்கிக் கேட்கிறாள்.

"அவர் வரவில்லையே என்பதற்காகத் தானே நான் அழுகிறேன். தன்னந்தனியாக இருக்கும் நான் அதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்?" என்று தலைவி தோழியைப் பார்த்துக் கூறுகிறாள்.

"அவர் எப்படியும் வந்து விடுவார்! நீ ஒன்றுக்கும் கவலைப்படாதே!" என்கிறாள் தோழி.

"நீ மிக எளிதாய்ச் சொல்லிவிட்டாய்! எனக்கு ஏற்படும் துன்பமும், வருத்தமும் உனக்கு எப்படியடி தெரியப் போகிறது? அவர் வந்து விடுவார் என்று அழகு சொட்ட நீ வாயால் கூறிவிட்டாய்! வருபவராக இருந்தால் அவர் எப்பொழுதோ வந்திருக்க வேண்டுமே; அவருக்கு என்ன தீங்கு ஏற்பட்டதோ? ஏது தடை ஏற்பட்டதோ? அல்லது என்னைத் தான் அடியோடு மறந்து விட்டாரோ?" என்று சொல்லித் தலைவி கோவெனக் கதறுகிறாள்.

தோழி அவளை அணைத்துக்கொண்டு, அவளது கண்ணீரைத் தன் கையால் துடைத்து விட்டுக்கொண்டு, "ஏன் வீணாகக் கண்கலங்கி, உன் அழகிய உடலின் நலத்தைக் கெடுத்துக் கொண்டிருக்கிறாய்? தலைவர் பொருள் தேட நீண்ட தொலைவு சென்றிருக்கக் கூடும்! திரும்பி வந்து சேர்வதற்கு, அவர் கணக்கிட்டுச் சொல்லிச் சென்ற நாட்களைக் காட்டிலும் சிறிது மிகவாக ஆகக்கூடும்! நீ ஓயாமல் வருத்திக் கொண்டிருப்பதால், உனக்கு வரப் போகும் பலன் என்ன? வீணாக உன்னை நீயே வருந்திக்கொள்ளாமல், வேடிக்கை விளையாட்டுக்களைப் பார்த்து உன்னை நீயேயல்லவா தேற்றிக்கொள்ள வேண்டும்! நீ அழுவதைப் பிறர் எவரேனும் பார்த்தால் ஏளனச் சிரிப்பு அல்லவா சிரிப்பார்கள்?" என்று கூறித் தோழி தலைவியின் வருத்தத்தை அடக்கப் பார்க்கிறாள்.

"நானாகவா வருத்தத்தைத் தேடிக் கொள்கிறேன்? இதோ பார்! இந்த மாலைப்பொழுதும், குளிர்ந்த வாடைக் காற்றும், மல்லிகை மணமும், தனிமையும் ஆகிய எல்லாமும் சேர்ந்தல்லவா என்னை வாட்டி, வதைத்து வருத்துகின்றன! நான் புலம்பி அழாமல் வேறு என்ன செய்ய முடியும்?" என்கிறாள் தலைவி.

"எவ்விதத் துன்பம் வந்துற்றாலும், அதனைத் தாங்கிக்கொள்ளும் அளவுக்கு ஆறுதல் பெறுவதுதான் உன்னைப் போன்ற பெண்களுக்கு அழகு!" என்கிறாள் தோழி.

"அதோ பார்! அந்த மாடு எந்த நிலையில் நின்று வருந்திக்கொண்டிருக்கிறதோ, அதைப் போன்றுதான் நானும் தனித்து நின்று வருந்திக் கொண்டிருக்கிறேன்!" என்று கூறி அங்குத் தொழுவத்தில் கட்டப்பட்டிருக்கும் பசு ஒன்றினைச் சுட்டிக் காட்டுகிறாள் தலைவி.

தலைவியும் தோழியும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கும் இடத்திற்கு அருகில் மாட்டுத் தொழுவம் ஒன்று இருக்கிறது. அதில் மாட்டின் சிறுநீரும், மழைநீரும், சாணமும் சேர்ந்து மாட்டின் கால்களால் குழப்பப்பட்டுச் சேறாகிக் கிடக்கின்றன. அந்தச் சேற்றை விட்டு அகற்றிக் கட்டப்படாமல், சிறிய பசுமாடு ஒன்று, அந்தச் சேற்றிலேயே நிற்குமாறு கட்டப்பட்டிருக்கிறது. அந்தப் பசுமாடு அப்படி இப்படி அசைய முடியாதபடியும், கீழே குனிந்து படுக்க முடியாதபடியும் நின்ற நிலையிலேயே நிற்குமாறு, தலைக்கயிற்றை இழுத்து, உச்சியிலே தூக்கி, மேலே கொட்டகை மரத்தில் கட்டப்பட்டுருக்கிறது. பசு நிமிரவும் முடியாமல், குனியவும் முடியாமல் அப்படி இப்படி அசையவும் முடியாமல். சேற்றில் நின்று தத்தளித்துக்கொண்டிருக்கிறது.

"பசு எப்படித் தன்னந் தனியாக நின்று, வேறு வகை ஏதும் காணாமல் வருந்திக்கொண்டிருக்கிறதோ, அப்படித்தான் நானும் வழி ஏதும் காணாமல் வருந்திப் புலம்பிக்கொண்டிருக்கிறேன்! நான் எப்படி ஆறுதல் அடைவேன்! நீயே சொல்!" என்று தலைவி தோழியிடம் அழுதுகொண்டே கூறுகிறாள்.

தோழி, தலைவிக்கு என்னவிதமாக மேற்கொண்டு ஆறுதல் கூறுவது என்று தெரியாமல் சோர்ந்து அப்படியே சாய்ந்து உட்கார்ந்து விடுகிறாள்!

* * *

இது நற்றிணை **109-ஆம்** செய்யுளின் உட்கருத்தை உள்ளடக்கித் தீட்டப்பட்ட காதலோவியமாகும். இந்த நற்றிணைச் செய்யுள் பாலைத் திணையைச் சார்ந்த 'பிரிவிடை ஆற்றாளாய தலைமகளது நிலைகண்ட தோழிக்குத் தலைமகள் சொல்லியது' என்னும் பிரிவைச் சேர்ந்ததாகும். இதனை இயற்றிவேர் **மீளிப் பெரும்பதுமனார்** என்னும் புலவராவார். 'பெரும் பதுமனார் என்று சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படுபவர் இவரே யாவார்' என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். மீளி என்பது ஒரு ஊர். இவர் அவ்வூரைச் சேர்ந்தவராதலால், இவருக்கு 'மீளி' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டிருக்கிறது. திருவில்லிபுத்தூர் வட்டத்தில் 'மல்லி' என்று அழைக்கப்படும் ஊர்தான் அக்காலத்தில் 'மீளி' என்று அழைக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும், மீளி என்பதுதான் நாளடைவில் மல்லி என்று திரிந்திருக்கிறது என்றும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். இவர் பாலைத் திணையைப்பற்றிப் பலபடப் புனைந்து பாடியுள்ளார். இவர் பாடியனவாக நற்றிணையில் 2, குறுந்தொகையில் 1 புறநானூற்றில் 1 ஆக நான்கு பாடல்கள் காணப்படுகின்றன.

ஒன்றுதும் என்ற தொன்றுபடு நட்பின்
காதலர் அகன்றெனக் கலங்கிப் பேதுற்று
அன்ன வோஇந் நன்னுதல் நிலையென
வினவல் ஆனாப் புனையிழை கேளினி
உரைக்கல் ஆகா எவ்வம் இம்மென
விரைக்கும் வாடை இருள்கூர் பொழுதில்
தொளியுடைத் தொழுவில் துணிதல் அற்றத்து
உச்சிக் கட்டிய கூழை ஆவின்

நிலையென ஒருவேன் ஆகி

உலமரக் கழியுமிப் பகல்மழ பொழுதே.

[நற்றிணை - 109]

[பொழிப்புரை: "உன்னைவிட்டுப் பிரியாமல் எப்பொழுதும் உடன் இருப்பேன்" என்று கூறிய பழைமையாகிய நட்பினின்றும் காதலர் பிரிந்து சென்றதனாலே, கலங்கி, மயக்குற்று இந் நல்ல நுதலையுடையாளுடைய நிலைமை அப்படிப்பட்டனவோவென்று ஓயாது வினவிக்கொண்டிருக்கும் அலங்கரித்த அணிகலன்களை யுடையாய்! நான் கூறுவதைக் கேட்பாயாக! இப்பொழுது கூறுதற்கியலாத துன்பம் விரைந்து பற்ற, ஒலிக்கும் வாடை வீசுதலையுடைய, கதிரவன் மேற்கே மறைகின்ற இம்மாலைக் காலமானது, இருள்மிக்க இராப்பொழுதிலே சேற்றையுடைய தொழுவத்தினின்றும் வேறிடத்திலே கட்ட வேண்டிய காலத்தில் அங்ஙனம் செய்யாமல், அத்தொழுவத்துள் கீழேயும் படுக்கவிடாது, நின்ற நிலையிலே நிற்குமாறு தலைக்கயிற்றை யிழுத்து உச்சியிலே தூக்கி மேற் கைம்மரத்திலிறுகப்பிணித்த குறுமையாகிய பசுவினது நிலைமையைப்போல், நான் தன்னந் தனியான ஒருத்தியாகவே நின்று உள்ளம் குழம்பி வருந்தும் வண்ணம் மெல்ல மெல்ல மறைந்து கொண்டிருக்கிறது; இந்த நிலையில் நான் எப்படி ஆற்றி யிருப்பேன்? புலம்புவதைத் தவிர எனக்கு வேறு என்ன வழி இருக்கிறது?

பேதுற்று - மயக்குற்று; விரைக்கும்—ஒலிக்கும்; கூழை - குறுமையுடைய; உலமரக் கழியும் - வருந்தும் வண்ணம் நீங்கும்:]

தலைவன் குறித்த காலத்தில் வராதது கண்டு பிரிவு ஆற்றாத தலைவி எத்தகைய துன்பத்திற்கு ஆளாகி வருந்துகிறாள் என்பதைப் புலவர் இச்செய்யுளில் அழகுபட எடுத்துக் கூறி யிருக்கிறார்.

ஆடவர்கள் காதலியின் உறவைப் பெற எவ்வளவு விரைவாக வாக்குறுதி கொடுக்கிறார்கள் என்பதையும், அதனை அவர்கள் எவ்வளவு விரைவாக மறந்து விடுகிறார்கள் என்பதையும் புலவர் தலைவியின் கூற்றின் மூலம் மறைமுகமாகச் சுட்டிக் காட்டுகிறார். "உன்னைவிட்டுப் பிரியாமல் எப்பொழுதும் உடன் இருப்பேன்" என்று தலைவன் அன்றொருநாள் கூறிய கூற்றைத் தலைவி நினைவு படுத்திப் பார்த்து வருந்துவதிலிருந்து மேற்கண்ட கருத்து தெளிவுபடும்.

குனிய முடியாமலும், நிமிர முடியாமலும், அப்படி இப்படி அசைய முடியாமலும், சேற்றிலே நின்று தவிக்கும்படி தாம்பு உயர்த்திக் கூரையில் கட்டப்பட்ட பசுமாடு தன்னந் தனியாக நின்று வருந்தும் வருத்தத்தைத், தலைவனைப் பிரிந்து கூடிக்குலாவி மகிழ முடியாமல் தன்னந்தனியாக அசைவற்று இருந்து வருந்தும் தலைவியின் வருத்தத்திற்கு உவமையாக்கிக் காட்டியிருக்கும் திறம் பெரிதும் வியந்து பாராட்டுதற்குரியதாகும்.

பசுமாட்டினை வேறிடத்தில் அவிழ்த்துக் கட்டுவதற்குப் பிறரின் உதவி எப்படித் தேவைப்படுகிறதோ, அப்படியே தன்னைத் தலைவனிடம் சேர்ப்பதற்குத் தோழியின் உதவி தேவைப்படுகிறது என்று தலைவி குறிப்பால் உணர்த்துகிறாள் என்று கொள்ளலாம்.

வாடைக் காற்றும், மாலைப்பொழுதும் காதல் நோயை மிகப்படுத்தும் என்பது உணர்த்தப்பட்டுள்ளது.

வினாவும் விளக்கமும்

வினா : தமிழ், தமிழர், தமிழ் நாகரிகம், தமிழ்ப் பண்பாடு என்று வானளாவப் புகழ்ந்து பேசும் தாங்கள் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக வளர்ந்துவரும் பண்பாட்டுச் சின்னங்களாகிய கோயில்கள், இலக்கியங்கள் போன்றவற்றை அவதூறு செய்வதன் மூலம் முடியுடை வேந்தர், சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த சான்றோர் அருள் கனிந்த அகத்தால் ஆண்டவனை உணர்த்திய அறவோர்கள் ஆகிய தமிழர் பரம்பரைக்கே முட்டாள் பட்டம் கட்டுகின்றீர்களே? இது அடுக்குமா? முறையா?

[இது அருள்நெறித் திருக்கூட்டத்தாரின் இருபதாவது வினா.]

விளக்கம் : தமிழ்-தமிழர் - தமிழ் நாகரிகம் - தமிழ்ப்பண்பாடு ஆகியவைபற்றி வானமளாவப் புகழ்ந்து பேசுவதிலே தமிழகத்துப் பகுத்தறிவாளர்கள் உள்ளபடியே பூரிப்படைகிறார்கள்; பெருமிதம் கொள்கிறார்கள்; பெருமைப் படுகிறார்கள். இதில் எள்ளளவு ஐயமும் யாரும் கொள்ளவேண்டியதில்லை.

பகுத்தறிவாளர்களாகிய நாம் தமிழின்-தமிழரின்-தமிழ் நாட்டின் இறந்த பழம் பெருங் காலந்தொட்டு வளர்ந்துவரும் வரலாற்றைப் புரட்டிப் பார்க்கிறோம்; காலத்திற்கும், கருத்திற்கும், புகழிற்கும், பெருமைக்கும், வலிவிற்கும், பொலிவிற்கும், வளத்திற்கும், வாழ்விற்கும் ஒட்டிப் பொருந்திவரக்கூடிய தேவையானவற்றையெல்லாம் எடுக்கிறோம்; அவற்றைப் பாராட்டுகிறோம், போற்றுகிறோம், காப்பாற்றுகிறோம்.

நாம் பழைமை என்பதற்காகவே எதற்கும் வளைந்துகொடுத்தலேயோ, நெளிந்து கொடுத்தலேயோ, பணிந்து கொடுத்தலேயோ செய்வதில்லை. தமிழர்களால் இறந்த காலத்தில் கொள்ளப்பட்டவை என்ற காரணத்திற்காக, எல்லாவற்றையும், அப்படியே கண்மூடித்தனமாக ஏற்றிப் போற்றிக் காப்பாற்றும் பழக்கத்தை நாம் கொண்டிருக்கவில்லை—கொள்ள விரும்பவில்லை. "பழையன கழிதலும் புதுவன புகுதலும், வழுவல காலவகையினானே" என்பதற்கிணங்க தள்ளவேண்டிய பிற்பட்ட பழைமைகளைத் தள்ளிக் கொள்ளவேண்டிய சீரிய புதுமைகளை நாம் கொள்ளவே செய்கிறோம். பழம்பெருங்காலந்தொட்டு என்றும் புதுமையாகவே இலங்கும் கருத்துக்களையும், பொருள்களையும் நிகழ்ச்சிகளையும் நாம் ஏற்றுக் கொள்ளவே செய்கிறோம். காலத்திற்கும், அறிவாராய்ச்சிக் கருத்துக்கும், வாழ்க்கைக்கும் ஒட்டிப் பொருந்தி வராதவைகள், அவை பண்டைத் தமிழர்களுடையனவாக இருந்தாலும் சரி, பிறருடையனவாக இருந்தாலும் சரி அவற்றைப் புறக்கணித்து ஒதுக்கித்தள்ள நாம் தயங்குவதில்லை.

பண்டை முடியுடை வேந்தர்களும், பெரியோர்களும் கொண்டிருந்தார்கள் என்ற காரணத்திற்காக, இக்காலத்தில் அறிவாராய்ச்சிக்குப் பொருந்தி வராதவை - மூடப் பழக்கவழக்கங்கள் நிறைந்தவை - குருட்டு நம்பிக்கை கொண்டவை-அறியாமை மிகுந்தவை என்று சொல்லப்படுபவைகளை நாம் ஏற்றுக்கொள்ள ஒருப்படுவதில்லை. பண்டைத் தமிழர்களின் போற்றுவதற்குரிய சிறப்புக் குறித்துச் சில பலவற்றை நாம் பாராட்டுகிறோம் என்ற காரணத்துக்காக, அவர்கள் கொண்டிருந்த எல்லாவற்றையும் ஒன்று விடாமல் அப்படியே பாராட்டிப் போற்றித்தான் தீரவேண்டும் என்று அருள்நெறித் திருக்கூட்டத்தார் எண்ணுவார்களேயானால், அவர்களது எண்ணம் எள்ளி நகையாடப்படவேண்டிய தொன்றாகும்.

நாம், தமிழரின் இலக்கியங்களில், பகுத்தறிவாராய்ச்சிக்குப் பொருந்திவரக்கூடிய, சிறப்புக்குரிய பகுதிகளை-இயல்புகளைப் போற்றி வரவேற்கிறோம். ஆனால் பொருந்திவராத, சிறப்பிழந்த பகுதிகளை-இயல்புகளைப் புறக்கணித்து ஒதுக்குகிறோம்.

கோயில்கள் அன்பை - அருளை - அறிவை - அறத்தை-ஆற்றலை-வளத்தை-வாழ்வை - வசதியை-புகழை-பெருமையை வளர்க்கும் இடங்களாக இருக்குமேயானால், அந்த அளவுக்கு அவற்றைப் பயன்படுத்த பகுத்தறிவாளர் முனையவே செய்கின்றனர். கோயில்கள் குருட்டு நம்பிக்கைகளையும், மூடப்பழக்க வழக்

கங்களையும் புகுத்தும் கட்டுக்கதைகளுக்கும், பொய்ப் புராணக் கருத்துக்களுக்கும் இருப்பிடமாகவும், சாதி வேற்றுமையைக் காட்டும் இடமாகவும், ஒரு குறிப்பிட்ட சாதியார் மட்டுமே குறிப்பிட்ட இடத்தில் நுழையலாம் என்று சட்டம் வகுக்கும் இடமாகவும், உயிரற்ற சிலைகளை உயிருள்ள சிலையாக மதித்துத் தூபதீப நைவேத்தியங் காட்டும் இடமாகவும், வெறும் சோம்பேறிகள் வாழும் இடமாகவும் காட்சியளிக்குமேயானால் அந்த அளவுக்கு அத்தன்மைகளை வெறுத்தொதுக்க விரும்புகிறார்கள்.

பகுத்தறிவாளர்கள் வேண்டுமென்றே அவதூறு செய்யும் பழக்கத்தை மேற்கொள்வதில்லை. ஆனால் வைதீக உள்ளம் படைத்தவர்கள் தாம் பகுத்தறிவு இயக்கத்தை மிகமிக இழிவாக அவதூறு செய்யும் பழக்கத்தை முழுக்க முழுக்கக் கொண்டிருக்கிறார்கள். பகுத்தறிவாளர்கள் காரண காரிய விளக்கமில்லாமல் எதையும் போற்றுவதுமில்லை; காரண காரிய விளக்கமில்லாமல் எதையும் கண்டிப்பதுமில்லை.

நாம், முடியுடை வேந்தர், சங்கம் வளர்த்த சான்றோர், அறவோர் ஆகியோரை எந்த அளவுக்குப் போற்றவேண்டுமோ அந்த அளவுக்குப் போற்றுகிறோம். அவர்களுடைய கொள்கைகள் எந்த அளவுக்கு ஒத்துவருகின்றனவோ, அந்த அளவுக்கு அவைகளை ஏற்றுக்கொள்கிறோம். அவர்களையெல்லாம் 'முட்டாள்கள்' என்று நாம் என்றும் குறிப்பிடுவதில்லை. அவர்களுக்கெல்லாம் அவ்வளவு தான் தெரிந்தது-அவ்வளவுதான் தெரியமுடிந்தது, முழுஉண்மையை அறிந்து கொள்வதற்கான வாய்ப்புக்களும் வசதிகளும் அவர்களுக்கு ஏற்படாமலிருந்திருக்கக்கூடும், ஆராய்ச்சி செய்து உண்மையை அறிந்துகொள்ளும் அளவுக்கு அறிவியல் வளர்ச்சி அவர்கள் காலத்தில் வளராமல் இருந்திருக்கக் கூடும், முழு நம்பிக்கையின் காரணமாக ஆராய்ச்சி செய்து பார்க்க மறந்திருக்கக்கூடும் என்ற முறையில் தான் அவர்களைப்பற்றியெல்லாம் நாம் கருதிக் கொண்டிருக்கிறோம். அவர்கள் எல்லோரும் ஏதுமே தெரியாத அடிமுட்டாள்கள் என்று நாம் என்றுமே கருதியதில்லை.

காட்டுமிராண்டிக் காலத்தில் சக்கிமுக்கிக் கற்களைத் தட்டி நெருப்புப்பொறியை உண்டாக்கிக் காட்டிய மனிதன் அந்தக்காலத்தில் பெரிய அறிவியல் அறிஞனாகத்தான் கருதப்பட்டான். இந்தக்காலத்தில் சர் சி. வி. இராமன் பெரிய அறிவியல் அறிஞராகக் கருதப்படுகிறார். காட்டுமிராண்டிக்காலத்து அறிவியலறிஞனைக் காட்டிலும் சர் சி. வி. இராமன் எவ்வளவோ வகையில் அறிவு மேம்பாடு உடையவர் என்பதை யாரும் மறுக்க முடியாது. அதற்காகக் காட்டுமிராண்டிக் காலத்து அறிவியலறிஞனை வெறும் முட்டாள் என்று, இந்தக்காலத்து அறிவியல் அறிஞர் யாரும் குறிப்பிடுவதில்லை. அந்த அறிவியலறிஞனுக்கு சிறிதளவு தான் தெரிய முடியும், எல்லாம் தெரிந்திருக்க வழியில்லை என்றுதான் கருதுவார்கள். அதுபோலத்தான் நாம் முன்னோர்களைப் பற்றிச் சிலபல கருத்துக்களில் கொள்கைகளில், பழக்கவழக்கங்களில் கருதுகிறோம்.

சுருக்கமாகக் கூறினால் நாம் பழைமைக்கு அப்படியே பணிவதில்லை-நெளிவதில்லை-வளைவதில்லை, ஆனால் பழைமையைப் பார்க்கிறோம் தேவையானவற்றை எடுத்துக்கொள்கிறோம்.

* * *

வினா: பணத்தைக் கொடுத்து வாக்குகளைப் பெறும் பழக்கத்தை வன்மையாகக் கண்டித்துவரும் தி. மு. கழகம், தான் தேர்தலில் நிற்பதற்குமட்டும் ரூபாய் ஐந்து இலட்சம் நிதி திரட்டுவானேன்?

விளக்கம்: வாக்குகளைப் பணத்திற்காக விற்கும் பழக்கத்தையும், வாக்குகளைப் பணத்திற்கு வாங்கும் பழக்கத்தையும் தி. மு. கழகம் என்றென்றும் வெறுத்தொதுக்கவே செய்கிறது; அந்த முறைகளை எப்பொழுதும் வன்மையாகக் கண்டித்தே வருகிறது.

தி. மு. கழகம் ரூபாய் ஐந்து இலட்சம் தேர்தல் நிதியாகத் திரட்ட முனைந்திருப்பது, தேர்தல் காலத்தில் வாக்குகளை விலைக்கு வாங்குவதற்காக அல்ல என்பதையும், தேர்தலைப் பொறுத்து ஏற்பாடும் அடிப்படை நியாயமானச் செலவுக்கே அந்தத் தொகை தேவைப்படுகிறது என்பதையும் வினவெழுப்புவோர் முதலில் உணர்தல்வேண்டும்.

நமது நாட்டில் தேர்தலை யாராலும் அவ்வளவு எளிதாக நடத்திச்செல்ல இயலாது. நியாயமான செலவுகள் பலவற்றையும் செய்தால் தான் அதனைக் கரையேற்ற முயலமுடியும். கல்வியறிவு பெருகியுள்ள மேலைநாடுகளில் பொதுத் தேர்தல்கள் எளிதாகவும், விரைவாகவும், மிக்க தொல்லையின்றி, மிக்க உழைப்பின்றி நிறைவேறிவிடும் தன்மையனவாக விளங்குகின்றன. அங்கெல்லாம் தேர்தலில் யார் யார் நிற்கிறார்கள் என்ற விபரத்தைச் செய்தித்தாள்களிலிருந்து ஒவ்வொருவரும்

படித்தறிந்து வைத்துக்கொள்வார்கள். போட்டியிடுபவர்களின் கட்சி, கொள்கை, திட்டம், தன்மை ஆகியவற்றைச் செய்தித்தாளின் மூலமே அறிந்து, யாருக்குத் தங்கள் வாக்குரிமைச் சீட்டுகளை வழங்குவது என்று தாங்களே ஒவ்வொருவரும் தெளிவுபெற்றுக்கொள்வார்கள். இன்னருக்குத்தான் வாக்குப் போடவேண்டும் என்று ஒருவரை யொருவர் தூண்டமாட்டார்கள்—தூண்டுவதை இழிவான செயல் என்று கருதுவார்கள் — தூண்டவேண்டிய இன்றியமையாமையே இருக்காது. தேர்தல் நாள் வரும். அவரவராக வாக்குகள் பதிவு செய்யப்படும் சாவடிக்குச் சென்று வாக்குகளைத் தம்மால் விரும்பப்படும் குறிப்பிட்டவருக்கு அளித்துவிட்டு வந்துவிடுவார்கள். அங்கெல்லாம் மக்கள் தேர்தல் நிலைமையைத் தாமே புரிந்துகொண்டு, தகுதி திறமை படைத்த ஒருவருக்குத் தம் வாக்குகளை அளிப்பதைத் தம் தலையாய கடமைகளில் ஒன்று என்று கருதி வாழ்ந்து வருவார்கள். எனவே தான் அங்கு தேர்தலில் நிற்பவர்களுக்கு மிகவான தொல்லையோ, பொருட் செலவோ ஏற்படுவதில்லை. சிலநாடுகளில் வாக்கு அளிப்பதைக் கட்டாயப்படுத்தியிருந்தால், தண்டனைக்கு அஞ்சி ஒவ்வொருவரும் தம் வாக்குகளை யாருக்கேனும் போட்டுத்தீரவேண்டிய இன்றியமையாமையிலிருக்கிறார்கள்.

நமது நாட்டிலே என்றால் யார் தேர்தலில் போட்டியிடுகிறார் என்பதை பொதுமக்களுக்கு முதலில் தெரியபடுத்த வேண்டியிருக்கிறது. அப்படித் தெரியப்படுத்த நகரம்-பேரூர்-சிற்றூர்-பட்டி-தொட்டிகளிலெல்லாம் சுவரொட்டி விளம்பரமும், துண்டு அறிக்கை விளம்பரமும் முறையே ஆயிரக்கணக்கில், இலட்சக்கணக்கில் செய்யவேண்டி ஏற்படுகின்றன. அதற்கு ஆயிரக்கணக்கில் ரூபாய் தேவைப்படும். தேர்தலுக்கு நிற்பவரைக் காரில் அழைத்துக்கொண்டு, ஊர் ஊராகச் சென்று, தனிப்பட்ட முறையிலும், பொதுக்கூட்டங்கள் மூலமும் அவரை அறிமுகப்படுத்திவைப்பதற்கு பல ஆயிரம் ரூபாய் உறுதியாகத் தேவைப்படும். பிரச்சாரங்கள் பல்வேறு பிரிவினராகப் பிரிந்து சென்று பிரச்சாரம் செய்வதாக ஏற்பாடு செய்தால், அதற்குப் பல ஆயிரம் ரூபாய் தேவைப்படும். வாக்காளர்களை வாக்குச்சாவடிக்கு அழைத்துக்கொண்டு வந்து, கொண்டுபோய் விடுவது என்ற பழக்கத்தை மேற்கொள்வது என்று துவங்கினால் அதற்குப் பதினாயிரக் கணக்கிலே செலவு ஏற்படும். செய்து தீர வேண்டிய, நியாயமான, அடிப்படைச் செலவுகள் என்ற முறையில் கணக்கிட்டுப்பார்த்தாலும் தேர்தலில் போட்டியிடும் ஒவ்வொருவருக்கும் பல்லாயிரக் கணக்கிலே ரூபாய் தேவைப்படும் என்பது தெளிவாகும்.

தி. மு. கழகத்தின் சார்பாகப் போட்டியிடத் தகுந்தவர்களாகக் காட்சியளிக்கும் கொள்கை வீரர்கள் பெரும்போலோரின் கையில் காசு இல்லை. அவர்களை நிறுத்திவைத்து, அவர்களுக்குத் தேவைப்படும் விளம்பரம், பிரச்சாரம் போன்ற அடிப்படைச் செலவுகளைக் கழகம் மேற்கொண்டால்தான், கழகம் தேர்தலில் வெற்றி பெறும் வாய்ப்பைப்பெற முடியும். தேர்தல் ஆய்வுக் குழுவினர் நாடெங்கும் சுற்றிப்பார்த்துச், சூழ்நிலைகளை அறிந்து வந்து, சுமார் 150 தொகுதிகளில் கழகம் போட்டியிடுவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்று அறிந்துள்ளனர். இப்படிப்பட்ட நிலைமையை ஆராய்ந்து பார்த்த தி. மு. கழகத்தின் மத்திய செயற்குழுவினர், கழகம் ரூபாய் ஐந்து இலட்சம் தேர்தல் நிதியாகத் திரட்டினால் தான், தேவைப்படும் நியாயமான செலவுகளைக் குறைவரச் செய்யமுடியும் என்று தீர்மானித்தனர்.

மேலும் காங்கிரசின் சார்பாக ஆங்காங்குப் பெரும்பெரும் பணக்காரர்களையும், மிட்டாக்களையும், மிராசுக்களையும், பட்டக்காரர்களையும், பாளையக்காரர்களையும், சமீன்தாரர்களையும், சரிகைக்குல்லாய்களையும் நிறுத்தி வைப்பதற்கான முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். பணத்தை வாரி இறைத்து வாக்குகளைப் பெற்றுவிடலாம் என்று அவர்கள் கனவு கண்டு கொண்டிருக்கின்றனர். அவர்கள் காணும் கனவைப் பொய்யாக்க வேண்டுமானால், மிகத் தீவிரமான-ஒழுங்கான-கவர்ச்சிகாரமான பிரச்சார வலிவு ஒன்றினால் செய்ய முடியும். அந்தப் பிரச்சார வலிவைப்பெறவே கழகம் ரூபாய் ஐந்து இலட்சம் தேர்தல் நிதியாகக் கேட்கிறது என்பதை விளுவெழுப்புவோர் உணர்வார்களாக.

★

நடைபெறாத நாடகம்

[அருணன்]

மணிவண்ணன் : மதிமன்னா! நீ சொல்வதெல்லாம் சரி என்றுதான் என்புத்திக்குப் படுகிறது. ஆனால் இவைகளைச் செயலாற்றுவதுதான் எவ்வாறென்று புரியவில்லை.

மதிமன்னன் : மணிவண்ணா! நான் சொல்லுவதுசரி என்று படுகிறதென்று கூறுகின்ற அளவிற்காவது இருக்கிறாயே! என்று பெருமைப் படுகிறேன். ஏனென்றால் உன்னைப் போன்ற பலரை நான் நட்புக் கொண்டிருக்கின்றேன். அவர்களெல்லாம் என்னுடன் சேர்ந்து கொண்டு முதலில் சரிசரி என்பார்கள். பின்னர் செயல் முறைக்கு வரும்போது எட்டப் போய்விடுவார்கள்-என்னையும் எண்ணாது பேசுவார்கள்.

மணி : நான் அப்படியிருப்பேனென்று கருதாதே மதி! என் ஆசையும் ஆர்வமும் உன்னைப்போன்றதேதான். நான் பிறந்து வளர்ந்து வாழும் சூழ்நிலைகளெல்லாம் மேலிடத்தவையாயினும் என் உள்ளம் படிந்திருப்பதெல்லாம் ஏழ்மையின் பரப்பில், எளிமையின் தோற்றத்தில் தான். மாடமாளிகைகளைவிட மாஞ்சோலையே மாளிகையாகவும்—உதிரும் சருகும் புல்லும் பஞ்சணையாகவும்-தன் கையே தலையணையாகவும் கொண்டு வாழ்வோர் வாழ்வை விரும்புகிறேன். வெண் பொற்கலத்தில் பாலிட்டுக் குழப்பிய சுவையுணவைவிட, வெங்காயத்தைத் துணைக்கொண்டு தன் செஞ்சொற்கிளியை அருகமர்த்திக் கஞ்சிக்கலயத்தைச் சுழற்றிச் சுழற்றிக் குடிக்கும் காட்சி கண்களை நிறைப்பது மட்டுமல்ல என் நாவின் சுவையையும் ஈர்க்கிறது.

மதி : மணி! நீ கூறுவது இயல்பே! இவைகளைத் தன் வாழ்வாகமாற்றிக்கொள்ள; வயனமானவாழ்வை ஒதுக்கிவிட; மாடியை மண்வீடாக்க யாரும் விரும்பமாட்டார்கள்; நானும் அவ்விதம் கூறமாட்டேன். உன் கண்ணும் கருத்தும் விரும்புவதை நீ மாளிகையிலிருந்தே செய்து கொள்ளலாம். அத்தகையோர் இன்பம் பெறுகின்றனர் என்பது உன் எண்ணம். ஆனால் அவர்களை அண்மிக் கேட்டுப்பார்-அல்லது அவர்கள் உரையாடலைக் கவனி. அப்போது புலனாகும் அந்தக் கஞ்சிக்கலயவாழ்வினரின் கொந்தளிப்பு. நீ எண்ணுவதுபோல சோலைக்குளிமையும் அதில் தென்றல் தரும் இனிமையையும் பற்றி இராது அவர்கள் பேச்சு; அன்றாடவாழ்வின் திண்டாட்டக்கணக்கும், அடுத்துச் செய்வதென்ன என்பதன் அகலாத ஏக்கமும் இவைபோல்வன பலவற்றின் இடையான பெருமூச்சுந்தான் இருக்கும். இவற்றை இல்லாமல் செய் யென்றுதான் சொல்கிறேன். மக்களுக்கு விடுதலையும் அவர்கள் வாழ்வில் நலமும் கிடைக்க வேண்டுமானால் அதற்கு உன்போன்றவர்களின் முயற்சியே வேண்டும்.

மணி : அதை நானும் உணர்ந்தே செயலாற்ற முற்பட்டிருக்கிறேன். இவ்வூரில் ஏழை பணக்காரனென்ற பாகு பாடு, உயர்ந்தோர் தாழ்ந்தோரென்ற வேறுபாடு, ஆண்டானடிமையென்ற கட்டுபாடு, நாளுக்கு நாள் கீழ்த்தர மாறுபாடு இவற்றைப் போக்கப்போகிறேன்.

மதி : கேட்டதும் இனிக்கும் — கேளோமா எனத் துடிக்கும் என் போன்றார் உள்ளம். இப்போது நீ கூறியமொழிகளைக் கேட்டால். எத்தனையோ ஆண்டுபலவாகப் பலவாறாக ஓடியும் ஆடியும் பாடியும் நிலைநாட்ட முயற்சிக்கும் செயல் வல்லாரின் தேட்டத்தையெல்லாம் ரத்தினச் சுருக்கமாகக் கூறிவிட்டாய். இதை எவ்வாறு செயலாற்றப்போகிறாய் சற்றேசொல் அதையும் கேட்கிறேன்.

மணி : எவ்வாறா? ஏழை பணக்காரன் என்ற இழிநிலையை முதலில் கழைவேன்.

மதி : செய்வாய் தம்பி! எப்படி? ஏழையைப் பணக்காரன் வீட்டில் குடியேற்றிப் பணக்காரனை ஏழைவீட்டுக்கு வழியனுப்பப்போகிறாயா? அல்லது ஊரிலுள்ள பணத்தையெல்லாம் ஒன்றாய்த் திரட்டி மக்களின் எண்ணிக்கையைக் கொண்டு வகுத்துத் தலைக்கு இவ்வளவு என்று பிரிக்கப்போகிறாயா?

மணி : இல்லை! உழைப்புக்குத்தகுந்த ஊதியமென்ற அமைப்பைக் கையாளப் போகிறேன்.

மதி: எப்படி?

மணி: எப்படியா? இதென்ன கேள்வி: கடும் உழைப்பை உடையவன் பெரும்பயனைப் பெற வேண்டும்.

மதி: ஒன்றை மறந்துவிட்டாயே...உழைப்பில் ஒன்றுக்கொன்று இணைந்திருந்தால்தான் உழைப்பே உருவாகமுடியும். எடுத்துக்காட்டாக நீ வைத்திருக்கும் பேனாவை எடுத்துக்கொள். வேண்டாம்...வேண்டாம் நம்மிடையே அடிக்கடி நடைபெறுவதைக் கொண்டே எண்பிக்கிறேன். இதோ இந்த மேசை. இதை விற்பனை செய்பவன் உன் சட்டப்படி இலேசான உழைப்பாளி அப்படித்தானே. இதற்குரிய மரத்தை அறுப்பவன் கடின உழைப்பாளி. இல்லையா?

மணி: ஆம்.

மதி: ஆனால் அவன் அந்த மரத்தை அறுக்க வாள்வட்டிப்பவன், அவன்பணிக்கு வேண்டிய சம்மட்டி செய்பவன், அவனுக்கு உதவும் உலைத்துருத்தி முதலியன ஆக்கித் தருபவன்-மீண்டும் அதற்கான மரம் அறுப்பவன் இவர்களெல்லாம் விற்போரின் உதவி கொண்டே வாழ்பவர்கள். எனவே உழைப்போரிலும் உழைப்பின் பயனை உரியவாறு காத்துப் பயன்பெறத் தருவோரின் பணியே சிறப்பாகும். இப்போதுகூறு எதை அகற்றப்போகிறாய்?

மணி: சிந்திக்கவேண்டியதுதான்....

மதி: சிந்திக்கத்தான் சொல்லுகிறேன். நீ மட்டும் சிந்தித்தால் போதாது. ஊரார் அனைவருக்கும் சிந்திக்கும் திறனை வழங்கவேண்டும். இத்தகையோர் தலையிட்டுப் பெரும் முயற்சி செய்து தீர்க்கவேண்டிய நிலை ஏற்பட்டதன் காரணமே சிந்தனையைச் சிதைத்ததால் வந்ததுதான். நீ முதலில் கூறியவை அனைத்தும் ஒன்றுதான். ஏழைபணக்காரனென்ற ஏற்றம், உயர்ந்தோர் தாழ்ந்தோரென்னும் கொடுமை, ஆண்டானடிமை யென்னும் அழிவுத்தன்மை ஆகியவையாவும் சிந்தித்தால் சிதைந்தோடும் நீர்க்குமிழிகள். ஆதலால் மக்களை முதலில் சிந்திக்கச்செய். அடுத்து நீ கற்ற அறிவின் பெருக்கத்தைக்கொண்டு விஞ்ஞான முறையால் உழவும், உதவிப் பொருள்களைப் பெருக்கவும் முயற்சிசெய். இவற்றையெல்லாம் செய்து கொண்டு பண்டமாற்று முறைகளைக் கைக்கொள். அதற்கடுத்துச் செய்யவேண்டியவைகளை நான் அவ்வப்போது கூறுகிறேன்.

மணி: மிகவும் நல்ல யோசனை. மதி! உன் கருத்துரைகள் பயன்படுவதனால் ஊர்மக்கள் பயன் பெறும்போது உன்னை வாழ்த்துவார்கள்.

மதி: என்னைவாழ்த்துவார்களா? வீழ்த்துவார்களா? என்று நான் கவலை கொள்ளவில்லை மணிவண்ணா! இப்போது நாம் செய்துள்ள திட்டங்களுக்கு மாறாக உன் மனநியதியை மாற்றச் சில பெரியமனிதர்கள் வந்து சேர்வார்கள். அவர்களால் நீ என்னை வெறுக்க விரட்டியடிக்க, கூடுமானால் தண்டிக்கக் கூடிய அளவுக்குக்கூட மாற்றப்படலாம். இதுதான் இந்தச் சமுதாயத்தில் பரம்பரை பரம்பரையாக நடைபெற்று வருவது. இல்லையானால் முதன் முதலிலேயே இத்தகைய கொடுமைகளை அகற்ற முற்பட்டவர்கள் அப்போதே வெற்றிகண்டிருப்பர். அவ்வாறின்றி இன்னும் இவை வளர்ந்துவருவது அத்தகையோர் இருப்பதால்தான். இதற்கு அவர்கள் கையாளுவதெல்லாம் உன் விரல்களைக் கொண்டே உன் கண்ணைக் குத்தச்செய்வது போலத்தான். என்னை எதிரியாகக் கருதச்செய்வர். ஏசிப்பேசுகின்ற அளவுக்குத் தூண்டுவர் உன் எண்ணங்கள் யாவுமே தவறெனக் கொள்ளும் அளவுக்கு உன் அறிவையே திருப்பும் தீரர்கள் அவர்கள். எதற்கும் ஏதாவது சொட்டை சொல்லிக்கொண்டிருக்கும் ஏது மற்றவர்கள் அவர்கள். ஆகவே நான் கூறுகிறேன் மணிவண்ணா! எத்தனை வெறுப்பு உனக்கு என்மீது ஏற்பட்டாலும், என்னை நீ பகைவனாகவே கருத நேரிட்டாலும், தண்டிக்க முற்பட்டாலும் உன்னை நான் மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன் கைக்கொண்டுள்ள கடமையை நழுவவிடாதே. அந்தப் பிடிவாத எண்ணம் உன்னிடமிருந்தாலே முற்கூறிய நிலைமை வந்து சேராது. இவை எல்லாவற்றையும் நீ கடக்க நேரிட்டாலும், நீ காதலிப்பவளைப் பெறமுடியாதவண்ணம் சமுதாயமும் சாதித் திமிரும் தடை செய்யும்போது அவை உன்னைக் கடந்து செல்லவிடா தென்று நம்புகிறேன். அவ்விதம் ஏற்பட்டாலும்கூட நான் கவலையோ திகைப்போ கொள்ளப்போவதில்லை. எதிர்பார்த்தே இருப்பேன். நான் காதலென்று கூறுவதுகேட்டு உன் கருத்துக் குளிரக்கூடும். உன்னை எதிர்க்கின்ற சமுதாயமும் அதனை ஒருகால் ஏற்கவும் வலியுறுத்தவும் கூடும். அவையெல்லாம் உன்மனப் போக்கை முழுதும் ஏற்றுக் கொள்ளுகின்ற காரணத்தாலல்ல. தங்கள் எண்ணத்தை நிலைநாட்ட வேண்டிய காரணத்திற்காக. சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் புழுவை விரும்பிவந்து தூண்டிலிலே சிக்கிக் கொள்ளுகின்ற மீனைப்போல; பெரும்பள்ளத்தில்

யானையை வீழ்த்த, அது விரும்புகின்ற அளவு புனைவுத்தோட்டத்தை ஏற்படுத்தி ஏமாற்றிக் கைக் கொள்ளுகின்ற முறையை யொப்ப; பதுங்கிக்கிடக்கும் பறவையை, அப்பறவை யினத்தின் குரல்போலவே ஒலித்துக் கைக் கொள்ளுந் தன்மைகள்போலவே நம் விருப்பத் திற்கிணங்கியும் - நம்மனம் விரும்புவனவற்றை நிகழ்த்தியும் - நம்குரலுக்கு மாறுபடாது ஒலித் தும் துடிக்கவைக்கின்றனர் — பள்ளத்தில் வீழ்த்துகின்றனர்-செயலற்ற தன்மையராக்கி இறகை யொடிக்கின்றனர். ஆதலால் அங்கே யும் நீ ஏமாந்து விடக்கூடாது. இதுபோன்ற சமயங்களில் காதலை விடக் கடமையைப் பெரி தெனக் கொள்ளவேண்டும். மனம் சற்றே அமைதிகுலையலாம்-அல்லல் படலாம் - அடுத் துச் செய்வதென்ன வென்று புலப்படாது திகைக்கலாம். கடமையை மறந்தவனைக் காத லைக் கொள்வதைவிட, காதலை நிறைவேற்று தலும் ஒருகடமையெனக் கொண்டு, கடமை யையே கருதியவனென்று இருமருங்கும் போற்ற வாழவேண்டும். மேலும், இந்தச் சமு தாயமிருக்கிறதே தொடக்கத்தில்தான் சாடும் கூத்தாடும் கொக்கரிக்கும். அதன் சட்டத்திற் குக்கட்டுப்பட்டவர்களையோ மீறியவர்களையோ, குறிப்பிட்டநிகழ்ச்சிகள் நிகழ்ந்ததன்பின் அவர் களைப்பற்றியோ செயலைப் பற்றியோ சிறிதும் பொருட் படுத்துவதில்லை சமுதாயம். எடுத் துக்காட்டுகளாகப் பலவற்றைக் கூறவியலும் என்றாலும் ஒன்றிரண்டு உனக்கு உணர்த்தும் முகத்தான் கூறுகிறேன் கேள்:

உயர்தரக் குடியினன் ஒருவன் மிகத்தாழ்ந்த குலத்தின் உறவைக் கொள்கிறானென்று வைத்துக் கொள். இந்தச்சமுதாயம் தொடக் கத்தில் "ஆஹா! குலத்திற்குக் கேடு, சமுதா யத்திற்கு அழிவு, அடுக்குமா இந்தச்செயல், நடக்கவிடலாமா இந்தக் கொடுமையை" என்று ஊர்ப் பெரியவர்களைக் கூட்டிக் கொண்டுவந்துகேட்டு கிலியுண்டாக்கும். குலப் பெருமைக்கும் குடித்தன்மைக்கும் அஞ்சிவிட்ட உயர்குடியினன் சமுதாயப் போக்குக்குக் கட் டுப்பட்டு விடுகிறான் என்று வைத்துக்கொள் வோம். அத்துடன் சமுதாயத்தின் ஆர்ப்பாட் டம் நின்று விடும். அவ்வளவுதான். மேற் கொண்டு 'இவன் நம் கட்டுப்பாட்டுக்கு ஒத்துக் கொண்டு நாம் கூறியவற்றுக்குச் செவிசாய்த் துச் செயலாற்றினானே' என்று அது துணை செய்வது கிடையாது, செய்யவும் முடியாது. ஏனென்றால் ஒன்றா இரண்டா அது சென்று துணைசெய்ய! இதேபோல:

சமுதாயத்தின் கட்டுத்திட்டங்களுக்கு அடி பணியாமல், அதன்பிடிககு அகப்படாமல், தன் அறிவுக்குச் சரியென்று பட்டதை ஒருவன் செயலாற்றுகிறானென்றால் அவனிடம் தன் வீராப்புச் செல்லாமல் தானே வீழ்ந்து கிடக் கின்ற இந்தச்சமுதாயம், முன்னையவனைப்போல வே இவனது நிகழ்ச்சிகளுக்குப்பிறகும் எது வும் செய்யமுடிவதில்லை. ஆனால் ஒன்றுமட்டும் நிகழும். என்னவெனில், ஊர் பிரபலக்காரர்கள் மறுத்தவன் வாழ்வைச்சிதைக்க, சின்னா பின்னப்படுத்த ஆவனசெய்வர். அப்போதும் மறுப்புணர்ச்சி படைத்தவன் தன் வரையில் அவர்களின் தயவை நாடாதிருந்து விடுவா னேயானால் நாளாவட்டத்தில் நாய்போல அவன் பின்சென்று குழைந்து நிற்பர். அவன் மேம்பட்டுவிட்டால் அவனையும் மேம்பாட்டை யும் பாராட்டிப்போற்றவும் செய்வர். சமுதாயச் சட்டங்களெல்லாம் ஒரு சிலரின் கருத்துப்படி ஊர்ச்செல்வாக்குப் படைத்தவர்களின் துணை கொண்டு அக்கிரமமாக நிறைசெலுத்தப்படு வதாகும். இத்தன்மையை உணராமலும், சமு தாயச் சட்டங்களின் தன்மையென்ன வென் பதை ஆராயாமலும், கற்றறிந்தோருங்கூட அதற்குத் துணைபோகின்றனர். துருவிப்பார்க் கப்போனால் சமுதாயச்சட்டமென்பதன் பெய ராலேயே பல மூடப்பழக்கங்களும், மடமைத் தன்மைகளும் வளர்க்கப் பட்டிருக்கிறது என் பது விளங்கும். இவை உன் நாட்களில் மறைந் தொழியும் வகை நீ செய்யவேண்டும்.

மணி: அவ்வண்ணமே செய்வேன்! இந்த நல்லபணியின் தொடக்கத்தை இன்றே-இன் னும் சிறிது நேரத்திலேயே தொடங்குகிறேன்.

மதி: எப்படி?

மணி: இவ்வூராலயத்தின் பெருவிழாவுக்காக என்அனுமதி நாடிவருவர் ஆலய மூலகர்த் தாக்கள். அவர்களிடம் 'விழா நிகழ்த்தல் கூடாது அவையனைத்தும் மதியைப்பாழ் படுத்தும் மடமைச்செயல்' என்று கூறித் தடுத் துவிடுகிறேன். திருப்பணி, ஆபரணம் மான யம் அனைத்தையும் பொதுமக்களுக்கு ஆக்க வேண்டுமெனத் திட்டம் செய்துவிடுகிறேன். தீர்ந்துவிடும் மடமைவளர்ச்சியின் ஒரு கூறு.

மதி: மகத்தான எதிர்ப்பின் பின் நீயே வகையின்றி அவர்கள் கூற்றை ஏற்றுக் கொள்ள நேரிடுமே தவிர உன் எண்ணத்தில் ஒரு அணுவளவும் நடைபெறாது.

மணி: ஏன் நடைபெறாது?

மதி: நடைபெறப்போவதை விளக்கு கிறேன். இப்போது கோயிலதிகாரிகள் வரு வார்கள். அவர்களிடம் நீ "இனி, திருவிழா வேண்டாம். ஆலயப் பணிகள் கூடாது-மான

யங்கள் மாற்றப்படவேண்டும். அணிபணி ஆபரணங்கள் அவதியுறுவோர்க்கு உதவப் படவேண்டும்" என்று கூறுவாய். அவர்கள் உன்னைமறுத்தோ எதிர்த்தோ எதுவும்பேச மாட்டார்கள். அவர்கள் எப்போதும் பேசியதே கிடையாது. அவர்களுக்குத் தெரியும் 'தங்கள் பேச்சு நிலைபெற இயலாது' என்பது. எனவேதான் அவர்களால் பேசவைக்கவல்ல ஒரு சிலரை நாடிச்செல்வார்கள். அவர்களோ:

"திருவிழாதான் தங்கள் உயிர்வளர்க்கும் அருமருந்து, ஆண்டவன் தரிசனமும் - அவர் தம் திருவீதிவலமும் தான் மக்களின் மாசு துடைக்கும் மகத்துவம் வாய்ந்தது" என நம்பிக்கிடப்போர். அவர்களைக்கொண்டே உன்னை எதிர்த்துக் கேட்கவைப்பர். அதாவது உன் விரல்களைக் கொண்டே உன் கண்களைக் குத்த வைப்பர். உன் எதிரே இருப்போரெல்லாம் நீ வணங்குந்தன்மையர், உன் மூதாதையர், உன் உள்ளங் கவர்ந்தவர், உன் உருவை வளர்த்தவர், உற்றார், உறவினர் என்போராகவே நிற்பர். அவர்களின் கண்ணீரும் கதறலும் உன் கடமையைக் கலக்கும். மடமைக்குத் தலை வணங்கச் செய்யும்...பின்னர் உன் இணக்கம் தானே பிறக்கும்.

மணி: உண்மைதான். ஆயின் என் செய்வது?

மதி: அதை, சிந்தித்துச் செய். அவர்கள் கூறுவதை மறுக்காதே. ஊர் மன்று கூட்டி அதிலே விழாபற்றிய சில தேவைகளைத் தெரிவிப்பதாகச்சொல். ஒத்துக்கொள்வர். அவ்விதம் ஏற்பாடு செய்யப்படுகின்ற பொது அவையிலே நீ சென்று சொல்.

மணி: என்னவென்று?

மதி: "ஆண்டவன் என்கனவிலே வந்து கூறினார்"

மணி: ஆண்டவனா?

மதி: ஏன்? ஆண்டவனென்று கூறுவதா என்று அருவருப்படுகிறாயா? அல்லது ஆண்டவன் நம்கனவில்வந்து கூறினாரென்றால் நம்பமாட்டாரென்று கருதுகிறாயா? ஆண்டவன் பேதமற்று எல்லோரிடமும் இருப்பார் என்பது தானப்பா அவர்களின் சித்தாந்தம். முள்ளால் முள்ளை எடுக்கவேண்டுமென்பதுபோல அவர்கள் கூற்றைக்கொண்டே அவர்களை மடக்க வேண்டும். நீ படித்தவனாயிற்றே! விவாத முறையில், 'ஒன்றை உடனே மறுப்பதைவிட-அப்படியே மறுப்பதைவிட, கூறுகின்றவற்றி லுள்ள குறைகளைக்கொண்டே மறுப்பது' என்ற முறை எளிது என்பது கூடவா தெரியாது? கூட்டத்தைக் கூட்டி அந்தக் கூட்டத்திலே கடவுளின் அருள்தன்மையையும், கலியாண குணங்களையும், பெருஞ்சக்தியின் நிதர்சனத்தையும் பற்றிப் பாராட்டி, போற்றி, முதலில் பேசவேண்டும். திருப்பா சுரத்தையும் அகவலையுங்கூடப் பாடவேண்டும், அதன் பிறகே அருட்கனவின் வரலாற்றைத் திருவாய்மலர்ந்தருள வேண்டும். அப்போது, கடவுள் கேட்டதாகக் கேட்கப்படும் கேள்விகளை அவர்களிடையே கடவுள்போல நீ கேட்டு அவர்களின் பதிலை உன் செயலுக்கு முதலாக்கமாக ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

"புனிதத்தின் உறைவிடம் ஆலயம்; பவித்திரத்தின் வரிவடிவம் இறைவன் உருவம். 'இப்படியன் இவ்வண்ணத்தன் இவன் இறைவன் என்றெழுதிக்காட்டொண்ணாதே' என்ற அப்பூதியடிகளின்பாசுரத்திற்கும் அப்பாற்பட்டதாய், திருத்தாண்டகத்தையும் தாண்டியதாய் விளங்குகின்ற, எவ்வுயிரும் இனிதாய்க் கொண்ட எம்பெருமான் இருக்கும்கோயில்."

இவற்றை நீ கூறும்போது 'ஆஹாஊஹ—' என்பார்கள் உன்னைப் பக்திமானாகக் கண்டோர். அத்துடன் நின்றுவிடாமல் மேலும்,

"அத்தகைய புனித ஆலயத்தை, அருட்டிருக்கல்யாண குணத்தை, அதன் அமுதன்ன பயனையெல்லாம் ஆருப்புரட்சியுடன பொழிய வேண்டும். அதன் பிறகே உன்பணிக்கு வர வேண்டும்.

"இன்னோரன்ன பல புகழொலிகளுக்குக் காரணமான - தேவலோகப் பிரத்தியட்சமான - பூலோக கைலாயமான - ஒவ்வொருமனித வடிவும் கோயில்; கோயிலுள் குடிபுக்க தெய்வமுமாக, நடமாடுங்கோயில்களுக் கோர்படமாடுங்கோயிலாகவுள்ள பவித்திர ஆலயத்தின் ஆக்கக்காரர்கள் அய்யர் பெருமக்கள்; அதாவது அர்ச்சகர்கள். அவர்களால்மட்டுமே தீண்டப்படவேண்டிய ஆண்டவனை அவன்கோயில் திருப்பணிகளை, அத்தகைய அய்யர்களால் பொது வாழ்க்கைக்குக்கூடத் 'தீண்டப்படாதவர்கள்' என ஒதுக்கிவைக்கப்பட்டிருப்போர்-பொதுவாழ்க்கைக்கும் மேம்பட்ட, உயிரன்ன ஒருசெயலை அந்த நீசர்கள்-விளக்கமாக சூத்திரர்கள் செய்யக்கூடாது. ஆண்டவனை உலாவுக்காக எடுத்துச்செல்வதும் சுமப்பதும் தேர் முதலிய திருவிழாக்களுக்குப் பணிபுரிவதும் கூடாது நான் ஒப்பமாட்டேன்" என்று கடவுள் கூறினார் கனவில் எனக் கூறு. இந்தக் கூற்றை அப்படியே ஒப்புக்கொள்ளும் வகை

யிலிருக்க வேண்டும் உன் முன்னுரை. இப்போது உன் பிடியினின்றும் அவர்கள் தப்ப முடியாது. அப்படியே தப்பினாலும் இவ்வூரில் உனக்கடங்கிய குடிகளே அனைவரும். அவர்கட்கு நீ கடவுளின் பெயரால் ஆணையிட வேண்டும்.

அடுத்தகட்டமும் கடவுள் கனவிலே கூறுவதுதான்.

"திருவாபரணம் முதலியன எனக்கு வேண்டாம். நான் நின்மலன்-நின்மயன்-நிராசையன். எனக்கேன் அணிபணிபூண்கள்? என்றும்; என்மக்கள் வாடுவதை நான் பார்த்திருக்க மாட்டேன். என்னை வழிபடுபவர்கள், எனக்குக் கோயில் கட்டியவர்கள், என்னைக் கும்பிட்டு என்மீது அன்பு செலுத்துபவர்கள் அவர்களின் குடும்பம் நலிகிறது. ஆதலின் இந்த நகைகளையெல்லாம் அததற்கு உரிய குடும்பத்தினரிடம் சேர்த்துவிடு! என்றும் கடவுள் சொன்னார்"

முதலில் நீ கூறியவைகளுக்கு மறுப்போர் ஒரு சிலரிருந்தாலும் "வறுமைக்குப் பணம் நகைவடிவில் உதவுகிறது-கடவுள் இதுவரை நாம்கண்ணீர் வடித்ததற்கு கருணைகாட்டி விட்டார்" என்று உன் சொற்களை அப்படியே ஏற்றுக்கொள்வர். இதில் காசுபடைத்தோர் மேல்வரவை எண்ணி மகிழ்வர். கதியற்றவர் தங்களுக்குப் பெரு நிதி வருகிறதே எனபதால் விரைவர். இதுவும் ஆனபின் மூன்ருவது முறை. அஃதுயாதெனில்:

ஊரிலுள்ள நிலங்களையெல்லாம் கணக்கெடுத்து அவற்றின் பரம்பரை நோக்கிப் பயிரிட ஏற்பாடுசெய்துவிடு. மான்யநிலங்களையும், கோயில்திருப்பணிக்கென விடப்பட்டிருக்கும் நிலங்களையும் பூசுரர்களென்னும் ஆண்டவன் பணிக்கு அவதரிப்பவர்களே பயிரிடவேண்டும்-ஏனையோர் பயிரிட்டால் மாசுபடிந்து விடுமென்ப வற்றையும் கடவுட்களே நினைவுப் படுத்தியதாகச் சொல். இப்போது உனக்கே கூடப்பிரமிப்பு ஏற்படக்கூடும். ஏனெனில் சொந்தநிலங்கள் இருப்பவர்களைவிட மான்யத்தின் பெயரால் (கடவுள்பணி என்பதன் பெயரால்) எவ்வளவு பெருநிலங்கள் ஒதுக்கப் பட்டிருக்கிறதென்பதும், அவற்றின் விளைபொருள்களைக் கொண்டு, உதவிக்கு வேண்டியவைகளுக்காக பலகிரியைகளை ஏற்படுத்தி அவற்றினின்றும் அன்ருடச்செலவுப்பொருள்களும் கூடுமானவரை குடும்பத்திற்காவனவும் சேமிப்பதும், அன்னவற்றிக்குப் பாவபுண்யமென்ற தலைப்பில் அமைக்கப் பட்டிருக்கும் சாத்திர சம்பிரதாய பிரமாண நிர்மாணங்களும் உனக்குத் தெரியவரும். இவற்றையெல்லாம் நீ செய்யப் புகுமுன் இவைகளுக்கு எதிராக உன்னவர்கள் வராமலிருக்கவேண்டி அவ்வப்போது பார்த்துக் கொள்ளவேண்டும். அவர்களுக்கு இந்தத் தன்மையின் விளக்கங்களை அவ்வப்போது நீகற்ற கல்வியறிவினைக் கொண்டும் பொருளாதாரத் தத்துவமுறையிலும், நாட்டமைப்பு வளர்ச்சி வீழ்ச்சி ஆகியவற்றைக் கொண்டும் விளக்கவேண்டும். ஏனென்ருல் தங்களால் எதிர்க்கத் திறமற்றவர்களாய்விட்ட அவர்கள் உன் சூழலைக் கொண்டே உன்னை மாற்ற-எதிர்க்க-கூடுமானால் அழிக்கக்கூட முற்படுவார்கள்.

மணி: அழிக்கவா?

மதி: ஆச்சரியமேன். அழிப்பது அவர்களுக்கு மிகச்சாதாரணம். தீயிலிடுவது-கடலில் தள்ளுவது - கழுவிலேற்றுவது-மறைந்தவகை அறியமுடியாமலே செய்து விடுவதெல்லாம அவர்களுக்கு மிகச்சிறிய அலுவல். ஆதலின் கண்ணுங்கருத்துமாக இதைச் செய்துவிட்டால் பேரளவு விழாக்கள் குறையும்-வீண் பொருட்சிதைவும்,-அறிவைக்கெடுக்கும் ஆகாதகாரியங்களும் நடைபெற மாட்டா! இதைவிட்டு, எடுத்த எடுப்பில் உன் திட்டத்தை நிறை வேற்றவேண்டுமென்ற எண்ணத்தில் செயலாற்ற முனைந்தால் நடைபெருததுமட்டுமல்ல நாவசைக்கும் தன்மைகூட உனக்கில்லாமல் செய்து விடுவார்கள்.

மணி: அப்படியே செய்கிறேன் மதி! இத்தகைய திட்டங்களைக் கையாளுந்திறன் யாவரும் பெற்றிருந்தால் நாடுஎத்தகைய நலன் பெற்று வளரும்.

மதி: நீயும் நானும் இப்படிப் பேசவேண்டிய நிலையேயிருந்திருக்காது. கையாளும் திறமையோ வலிமையோ உள்ளவர்கள் இல்லாமற் போகவில்லை. இத்தகையஎண்ணம் வளருவது வேதனை ஏற்படும்போதுதான். அப்படி வேதனையின்போது சிந்தித்தாலும் கூட. வேதனையைத்தீர்த்துக் கொள்ளும் முயற்சியில் அடுத்த கணம் மாறிவிடுகிருர்களேயல்லாமல் வேறுவழியில் இதம் நாடிமுனைவதில்லை. முனைந்தாலும் ஏழையால் இது போன்ற காரியங்களை நிகழ்த்தமுடிவதில்லை. ஆனல் உன்னைப்போன்ற பெருந்தனக்காரர்களோ ஏழைகளின் நிலையை உணர்ந்து செயலாற்றும் வகையுமில்லை. ஆகவே நலிவுற்றோர் அனைவரும் ஒன்று கூடுகின்றனர்-திட்டங்கள் வகுக்கின்றனர். வகுக்கப்பெற்ற திட்டங்களைத்தும் செயலாற்றமுற்படும்போது செல்வாக்கு மிக்கோரின் எதிர்ப்புக்காளாகின்றனர்.

எண்ணியது எவ்வாறு ஈடேறும்? செல்வவளமும்-செல்வாக்கு நிறைவும்- இடுங்கட்டளையை ஏற்கின்ற ஆளம்புகளும் இருக்கும் உன்னைப் போன்றோராலேயே, நிறைசெலுத்த முடியுமா என்று நான் அஞ்சுகிறேனென்றால் அதில் ஆச்சரியமில்லை: ஏனெனில் இது போன்ற திட்டங்களுக்கு எதிராவோரைத் தடுக்க-அவர்கள் தடையைக்கடக்க-கடந்தாலும் பின்புறத் தாக்குதல்களுக்கு வீழாமலிருக்க வேண்டுமானால் அதற்குச் செல்வவளம் மிகுதியும் தேவைப்படுகிறது. நமது ஆணைக்கு அடங்கி நடப்போரனேகர் வேண்டியிருக்கிறது. இவற்றை ஏழைகளாய்விட்டோர் எப்படிப் பெறமுடியும்? எப்போதுபெற முடியும்? இந்த இழிநிலை என்று ஒழியும்? ஆகவே, நான் கூறியவற்றைக் கவனத்தில் கொண்டுசெயலில் இறங்கு. எவ்வாற்றானும் கோபத்திற்கு இடங்கொடுத்துவிடாதே! அறிவுக்குப் பொருத்தமற்ற சில விவகாரங்கள் கூடஏற்படலாம். அப்போதுதான் நீ அமைதியாகவும் ஆத்திரப்படாமலும் விளக்கம் தரவேண்டும். எதிலும் அவர்கள் வல்லமை செல்லாவிட்டால், நமக்கு ஆத்திரமூட்டி அதனை அடிப்படையாகக்கொண்டே தங்கள் கருத்தை நிறைவேற்றிக்கொள்ள முனைவர். எனவே, ஆத்திரம் அறிவை அகற்றிவிடும்; நம் அரும்பாடுகளனைத்தும் பாழாகும் என்ற அச்சம் இருந்துகொண்டே இருக்கவேண்டும். மறவாதே! நான் வருகிறேன்.

மணி: சென்றுவா!

* * *

[சோலை. அதிலே ஓர் புறம்]

கம: வெகுநேரமாகக் காத்துக்கொண்டிருக்கிறீர்களா அத்தான்!

மணி: இல்லைகமலா! இப்போதுதான் வந்தேன். நீ எங்கே எனக்காகக் காத்திருந்து காணாது வருந்தி வாட்டமுற்றுச் செல்லுகிறாயோ என்று ஓட்டமும் நடையுமாக வந்தேன்.

கம: வந்ததும், 'உங்கள்விரைவு தேவையற்றது' என்று எண்ணியிருந்துவிட்டீர்களாக்கும். பரவாயில்லைபத்தான். நானும் என்பங்குக்குத் தங்களைப்போலவே ஓடோடியும் வந்து சேர்ந்தேன்.

மணி: உன் தாமதத்திற்குக் காரணம்?

கம: நீங்கள் சொல்லவில்லையே!

மணி: அது சுருங்கச் சொல்லி விடும் சிறு செய்தியல்ல மிகப்பெரிய செய்தி...

கம: சொல்லுங்களேன் கேட்கிறேன். காதலர் நினைவில் கடலையும் தாண்டி-வானத்தையும் எட்டிப்பிடித்து விடுவார்களென்பீர்களே அதையும் விடப் பெரிய செய்தியா?

மணி: எண்ணமிட்டால் அதனினும் ஆயிரம் மடங்கு பெரிதுதான்.

கம: ஆயின் இப்போதே சொல்ல ஆரம்பித்து விடுங்களத்தான். என் ஆசை இனியும் அடக்க அடங்காது.

மணி: வாழ்வைப் பற்றிய திட்டம்

கம: வேண்டாமத்தான்! அதற்காக ஏன் அவ்வளவு பெரிய திட்டம். தங்கள் துணிவும் நேர்மையும் மட்டுமிருந்தால் போதுமே!

மணி: நம் வாழ்வுமட்டுமல்ல, ஊரார் வாழ்வும் உயர்வுற வேண்டுமென்பதற்காகவே அந்த ஒப்பற்ற திட்டத்தை உருவாக்கியிருக்கிறேன். கமலா! நம் இருவர் திருமணமும் நிறைவேறும்போது இந்தஊர், அறிவின்நிலையமாக-ஆராய்ச்சிக் கூடமாக - ஊரவரெல்லாம் பண்பாட்டின் பாதுகாவலராக-அவர்களின் செயல்முறைகள் சொல்லற்கரியனவாக மிளிரும்.

கம: ஊர்வம்பு நமக்கேனத்தான். நாம் வாழ வகையென்னவென்று யோசிக்காமல்... இதெல்லாம் அந்த உங்கள் நண்பர் மதியின் வேலையாக்கும். எனக்கு அப்போதே தெரியும். அந்த ஆள் அடிக்கடி உங்களுடனேயே திரிவதும்- நீங்கள் அவரைப் பிரியாது கூடியிருப்பதும், இதுமாதிரி ஒரு பெருந்தொல்லைக்கு இடமாகுமென்று. அந்த ஆள் எப்போதும் இப்படித்தான். எதற்கும் இடக்கு - குதர்க்கவாதம்-எதிர்ப்பு அப்பப்பா!

மணி: அவனை அப்படியெல்லாம் எண்ணாதே! அவன் மிக உயர்ந்தவன். உயர்ந்தவனுக்குத்தான் உலகம் இடமளிப்பதில்லையே!

கம: எப்படியிடமளிக்கும். உருப்படுகின்ற வகை ஒன்றிருந்தாலவது அவர்கவனம் சென்றால் தானே. அவருக்கென்ன! ஊருங்கிடையாது-உற்றாரும் யாரென்று தெரியாது. எப்படியோ காலங்கழிகிறது. அதில் இப்படி என்னைப் போலுள்ளவர்களின் எண்ணத்திற்கு அழிவு செய்கிறார். உம்...இனி ஏது அமைதி-அன்பானபேச்சு - அருமை - இன்ப மெல்லாம். யாரும் எதிரில்லையென்று நினைத்தேன். 'இருக்கிறேன் நான்' என்றிவர் முளைத்திருக்கிறார்.

மணி: எண்ணிப்பார்க்கும் திறமில்லையா! ஏதுமறியாதவளா நீ! இனியும் அவ்வாறு பேசாதே!

(தொடரும்)

அண்டார்டிகா

மனிதனின் கண்ணுக்கு மிகவாகத் தட்டுப்படாத கண்டம் ஒன்று உலகில் இருந்து வருகிறது. அது ஐரோப்பாக் கண்டத்தையும், ஆத்திரேலியாக் கண்டத்தையும் ஒன்றாக இணைத்தாற் போன்ற பெரியதொரு கண்டமாகத் திகழ்கிறது.

அதுதான் அண்டார்டிகா கண்டம்!

அது சுமார் அறுபது இலட்சம் சதுர மைல் பரப்புக்கொண்டதாய் உலகின் தென் முனையைச் (South-Pole) சுற்றிப் பரந்து கிடக்கிறது. உலக நிலப்படங்களில் அதன் எல்லைக் கோடுகள் ஒருவாறாகக் குறிப்பாகத்தான் சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றன.

எவரெஸ்ட் மலைமுகடுகூட மனிதனின் காலடியைப் பார்த்துவிட்டது. ஆனால் ஆண்டார்டிகாவின் பெரும்பகுதி இன்னமும் மனிதனின் காலடியைப் பார்க்காமலும், மனிதனால் கண்டுபிடிக்கப்படாமலும் இருந்து வருகிறது. அன்டார்டிகாவை ஆராய்ந்துபார்ப்பதன் மூலம் உலகின் பல்வேறு மறைபொருள்களை (இரகசியங்களை) அறிந்துகொள்ள இயலும் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்.

மக்கள் மற்றைய கண்டங்களில் குடியேறி, அவற்றை வளப்படுத்தி, வளர்த்து, அவற்றில் வாழ்க்கை நடத்துவதைப்போல், அண்டார்டிகாவைப் பயன்படுத்திக்கொள்ள இதுகாறும் முடியாமலிருப்பதிலிருந்தே, அதில் நாம் கண்டறியாத புதுமைகள் நிரம்பியிருக்கக் கூடும் என்று எண்ணுவதற்கு இடமிருக்கிறது. அண்டார்டிகாவை அவ்வளவு எளிதில் அணுகமுடியாதபடி உறைந்துபோகும் கொடுங் கடலும், மிதந்துவரும் பெரும் பெரும் பனிப் பாறைகளும், சுழன்று வீசும் குளிர்ந்த சூறாவளியும் அணுக முயலுபவர்களைத் தடுத்து நிறுத்திவிடுகின்றன.

அண்டார்டிகாவின் இயற்கைச் சூழ்நிலை மனிதன் தங்கி வாழமுடியாத அளவுக்கு அமைந்திருக்கிறது. அதன் இயற்கை நிலைமைகளைக் கண்டறிவதற்காகப் பல்வேறு காலங்களிலும், பல வீர தீர நெஞ்சுஉரம் படைத்தவர்கள் கூட்டங்கூட்டமாகச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் அண்டார்டிகாவின் கடற்கரை ஓரங்களில் உள்ள பாறைகளில் சிறிய சிறிய குடிசைகள் கட்டுக்கொண்டு வாழ முயல, அவர்களது குடிசைகளையெல்லாம் பனிக்காற்று பிய்த்து எறிந்து, ஆட்களையும் நீண்ட தொலைவுக்குத் தூக்கிக்கொண்டுபோய்ப் போட்டுவிடும். பனிப் பாறைகள் உருண்டு வந்து அவர்களை அப்படியே நசுக்கி, இருந்த இடம் தெரியாமல் ஆக்கிவிடும். சில சமயங்களில் வேறு சிலர் பனிப்பாறைகளைத் தோண்டிக் குடைவுகள்செய்து அவற்றில் வாழ முயன்றிருக்கிறார்கள். திடீரென்று பனிப்பாறைகள் உறையத் தொடங்கி, குடைவுகளை உள்ளிருப்பவர்களோடு சேர்த்துத்தூர்த்து அடைத்து, அங்கெல்லாம் மேடுகள்கட்டி விடும். இப்படி எண்ணற்றவர்கள் புதையுண்டு போயிருக்கிறார்கள்.

அண்டார்டிகா இயற்கையிலேயே அதிசயங்கள் பலவற்றைக் கொண்டதாகும். அந்த அதிசயங்களும் அதற்கே உரித்தானவையாகும். அண்டார்டிகா பகுதியும் வடமுனையை ஒட்டி விளக்கும் ஆர்க்டிக் பகுதியும் சிற்சில வகைகளில் வேறுபட்டே காணப்படுகின்றன. வடமுனையைச் சுற்றி ஆர்க்டிக் மாகடல் விளங்குகின்றது. அங்கு எந்தத்தனிக் கண்டமும் இல்லை. ஆர்க்டிக் மாகடலில் பனிப்பாறைகள் மிதந்து கொண்டிருக்கும்.

ஆனால் அண்டார்டிகா பனிப்பாறைகள் மூடிக்காணப்படும், மண்ணும் மலைகளும் நிறைந்த பரந்த நிலப்பரபபாகும். மலைகள் எங்கு தொடங்கி எங்கேபோய் முடிகின்றன என்று தெரியவில்லை. எவரஸ்ட் முகட்டைக் காட்டிலும் உயரமான முகடுகள் இருக்கக் கூடும் என்று ஊகிக்கப்படுகின்றது. இந்தக் கண்டம் ஏறத்தாழ வட்டவடிவமானது. இதனுடைய மையப்புள்ளி தென்முனைக்குச் சற்று அருகில் இருக்கிறது.

அண்டார்டிகா மனிதன் நெருங்க முடியாத அளவுக்கு இயற்கை நிலைகளைக் கொண்டிருக்கிறது. சில சமயங்களில் மலையின் முகடுகள் மட்டும் பனிக்கட்டிப் படலங்களைக் கிழித்துக் கொண்டு தலை நீட்டுவதுபோல் தென்படும்.

மற்றைய கண்டங்களில் நீர்த்துளிகள் மழையாகப் பெய்வதைப்போல் அண்டார்டிகாவில்

பனிக்கட்டிகள் மழையாகப் பொழியும் இங்கே பனிக்கட்டிகள் கடலை நோக்கிப் பல்வேறு வடிவங்களில் சரிந்து சென்று கொண்டிருக்கும். பல்லாயிரக்கணக்கான அடிகள் உயரத்திலிருந்து பனிக்கட்டிகள் வீழ்ச்சியாக விழும். பயிர்டுமோர் (Beardmore) என்ற பனிக்கட்டிகள் உருண்டோடும் ஆறு, பன்னிரண்டு மைல்கள் அகன்று, பல்லாயிரக்கணக்கான மைல்கள் நீண்டு இறுதியில் கடலில்போய்ச் சேருகிறது. 500 அடி கனமும் ஆயிரக்கணக்கான அடிகள் நீட்டமும் கொண்ட பனிக்கட்டிகள் அந்த ஆற்றில் சரிந்து கடல் நோக்கிச் செல்லுமாம்.

அண்டார்டிகாவில் எரிமலைகள் கூட இருக்கின்றன. அவை எத்தனை இருக்கின்றன என்று கணக்கிட்டுப் பார்க்கமுடியவில்லை. எரிபஸ் (Erebus) என்ற எரிமலை எப்பொழுதும் புகைந்து கொண்டேயிருக்கிறது. வேறு சில எரிமலைகள் அவ்வப்போது வெடித்து நெருப்புக்குழம்புகளைக் கக்கிய வண்ணமிருக்கின்றன. என்ன நெருப்புக்குழம்புகள் பீறிட்டுக்கொண்டு வந்தாலும், அவையெல்லாம் அண்டார்டிகாவை எட்டிப் பார்த்தவுடன் அடங்கி, ஒடுங்கி, குளிர்ந்து, பனிக்கட்டிகளுக்குள் மறைந்து விடுகின்றன.

உலகிலேயே மிகக் குளிர்ந்த இடம் அண்டார்டிகா என்றுதான் சொல்லப்படுகிறது. அண்டார்டிகா கண்டம் ஆறுதிங்கள்காலம் தொடர்ந்து இருண்டேகிடக்கும். அந்த ஆறு திங்கள் காலத்தில் கதிரவன் ஒளியைக் காணவே முடியாது. அப்பொழுது அந்தக் கண்டத்தின் நடுப்பகுதியில், எவ்வளவு குளிர் இருக்கும் என்று இதுவரையிலும் யாராலும் கண்டறிய முடியவில்லை. கடற்கரையோரப் பகுதிகளில், பாரன்கீட் அளவுக்கருவியின்படி கீழளவு 83 டிகிரி என்று குறித்திருக்கிறார்கள். ஆசியாவிலுள்ள சைபீரியா பனிப்பாலைவெளி கீழளவு 85 டிகிரி என்று குறிப்பிடப்படுகிறது. அண்டார்டிகாவின் உள்பகுதி இன்னும் மிகவாகக் குளிர்ந்ததாகத்தான் இருக்கவேண்டும் என்று ஊகிக்கப்படுகிறது.

இந்தக் கண்டத்தில் காற்றும் மிகக்கடுமையாக, வலுவாக வீசும். உலகிலேயே மிகக் கொடுமையான வலுவான காற்று இங்கேதான் வீசுகிறது என்று நிலநூல் வல்லுநர்கள் கூறுகிறார்கள். காற்று மணி ஒன்றுக்கு 100 மைல் அல்லது அதற்குமேற்பட்ட மைல் வேகத்தில் வீசுமாம்.

உலகின் தென்முனை கடல்மட்டத்திற்குமேல் 10,000 அடி உயர்ந்த மேட்டு நிலத்தில்தான் அமைந்திருக்கிறது. இரண்டு தடவைகள்தான் மனிதனுடைய காலடி இந்தத் தென்முனையில் பட்டிருக்கிறது. 1911-ஆம் ஆண்டு தெற்குக் கோடைக்காலத்திலும் 1912-ஆம் ஆண்டு தெற்குக் கோடைக்காலத்திலும் இரு வேறு குழுவினர் தனித்தனியாகத் தென்முனைப் பகுதியை அடைந்தார்கள். அதற்குப் பிறகு பலபேர் அந்தப் பகுதியின் மேல் விமானத்தில் பறந்து சென்றிருக்கிறார்களே ஒழிய, அங்கு யாரும் காலடி எடுத்து வைத்ததாகத் தெரியவில்லை.

நியூசிலாந்திலுள்ள மலைகளுக்கும், தென் அமெரிக்காவிலுள்ள ஆண்டீஸ் மலைக்கும் இடையே அண்டார்டிகா மலைகள் இருந்து, ஒரே மலைத்தொடரை நினைவு படுத்துவதாக நிலநூல் வல்லுநர்கள் கூறுகிறார்கள். அண்டார்டிகாவும், தென் அமெரிக்காவும், ஒரு காலத்தில் ஒன்றாக இணைந்திருந்தன என்றும், உலகம் இறுக இறுக நாளடைவில் ஒன்றை விட்டு ஒன்று விலகிப் போயின என்றும் கூறுவர். அண்டார்டிகாவை அகழ்ந்து காணும்போது, பல காலங்களில் ஏற்பட்ட அடுக்கடுக்கான நிலப்படைகளில் எலும்புக் கூடுகள், ஓடுகள், பூண்டுகள், மரங்கள் நிலக்கரி முதலியன காணப்படுகின்றன. தென்முனைக்கு முந்நூறுமைல் தொலைவிலேயே எலும்புக் கூடுகள் அகப்படுகின்றன என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். மற்றைய கண்டங்கள் பனிப்பாலைவெளிகளாகக் காட்சியளித்த காலத்தில், அண்டார்டிகா அவ்வளவு பனி நிறைந்ததாக இருந்திருக்காது என்று ஆராய்ச்சி வல்லுநர்கள் ஊகிக்கிறார்கள். குறைந்த அளவிலேயே அகழ்ந்து காணும் ஆராய்ச்சி நடைபெற்றிருப்பதால், அங்கு என்ன என்ன வகை விலங்குகள் வாழ்ந்தன என்பதைத் தெளிவாகக் கண்டறிந்து கொள்வதற்கு இன்னமும் வாய்ப்பு ஏற்படவில்லை.

மற்றைய கண்டங்களில் காணப்படுவன போன்ற கனிப்பொருள்கள் எல்லாம் இல்லாவிட்டாலும், பெரும்பாலானவை இந்தக் கண்டத்தில் புதைந்து கிடக்கின்றன என்பது மட்டும் ஐயப்பாட்டிற்கு இடமில்லாமல் தெரிய வருகிறது. எனவேதான் உலக வல்லரசுகளெல்லாம் அண்டார்டிகா மீது தம் ஆழ்ந்த பார்வையைச் செலுத்தி, அந்த நிலப்பகுதியைப் பிடிப்பதில் முயற்சி செய்து வருகின்றன. இந்தக் கண்டத்தில் நிலக்கரி கிடப்பது பல இடங்களில் தெரிகின்றது. அண்டார்டிகாப் பயணத்தில் எல்லோருக்கும் ஆவலை வளர்க்க வேண்டி, சிலர் அங்கு யுரேனியமும், மண்ணெண்ணெயும் கிடைப்பதாகச் சொல்லுகின்றனர். அதன் உண்மை தெளிவாகத் தெரிய

வில்லை. மற்றைய கண்டங்களில் கனிப்பொருள்களின் வளங்கள் குறையத் தொடங்கும் போது, அவற்றை அண்டார்டிகாவில் தோண்டி எடுக்க முயலுவார்கள் என்பது மட்டும் உறுதி.

பனிப்பாறைகள் ஒரு மைல் கனத்திற்கு உறைந்திருப்பதாலும், அவைகள் நகர ஆரம்பித்துவிடுவதாலும் சுரங்கங்கள் தோண்டுவதற்கான முயற்சிகள் பயனற்றுப்போவதோடு, இயலாமலும் ஆகி விடுகின்றன.

அணுக்குண்டு நீர்வளிக்குண்டு போன்ற போர்க் கருவிகளின் சோதனையை நடத்திப் பார்க்க, எதிர் காலத்தில், அண்டார்டிகாவைப் பல வல்லரசுகளும் தேர்ந்தெடுக்கும் என்று சொல்லப்படுகிறது. அதனால் இருவித பலன்கள் ஏற்படமுடியும். ஒன்று யாருக்கும் தீங்கு விளைவிக்காதபடி சோதனையை நடத்திப் பார்க்க முடிகிறது; மற்றொன்று அண்டார்டிகா நிலத்தை அகழ்ந்து காணுவதற்கு வழி ஏற்படுகிறது. நாளடைவில் அணுவாற்றலின் உதவி கொண்டு, அண்டார்டிகாவை விளைநிலமாக மாற்ற இயலும் என்று சில அறிவியலறிஞர்கள் கூறுகிறார்கள். இப்பொழுதே அண்டார்டிகாவின் பகுதிகள் தங்களுக்குத்தான் சேரவேண்டும் என்று உரிமை கொண்டாடிக் கொண்டு பலநாடுகளும் போட்டா போட்டியில் இறங்கிவிட்டன.

முதன் முதலில் **நத்தானியல் பாமர்** என்ற அமெரிக்கப்படை வீரனதான் 1820இல் அண்டார்டிகாவைக் கண்டறிந்து உலகுக்கு உரைத்தான் என்று அமெரிக்கா சொல்லுகிறது. **பெல்லிங்சாசன்** என்ற உருசியப் படைவீரன் தான் இதனை முதன் முதல் கண்டுபிடித்ததாக உருசியா சொல்லுகிறது. இரண்டு படைவீரர்களும் தனித்தனியே அண்டார்டிகாவைக் கண்டுபிடித்து, இருவரும் அண்டார்டிகாவிலேயே ஒருவரையொருவர் அறிமுகமாகிக் கொண்டார்கள் என்றும் கூறுவர்.

அண்மையில் அமெரிக்காவைச் சேர்ந்த 'அட்கா' (Atka) என்ற பனிக்கட்டி உடைக்கும் கப்பல் ஒன்று அண்டார்டிகாவைப் பற்றிய ஆராய்ச்சிநடத்த அனுப்பிவைக்கப்பட்டது. அது அண்டார்டிகாவின் நிலத்தைத் தெளிவாக அறிந்து வரும் என்று எதிர் பார்க்கப் படுகிறது.

உலகின் இயற்கைப் பொருளமைப்பை 1957-58ஆம் ஆண்டில், ஒன்று விடாமல் தெள்ளத்தெளிய அறிவது என்ற முயற்சியில் 36 நாடுகள் ஈடுபட்டுள்ளதால், அண்டார்டிகாவைப் பற்றிய முழுவிபரம் ஓரளவுக்கு அப்பொழுது தெரியக்கூடும் என்று நம்பப் படுகிறது. அமெரிக்கா ஒரு ஆராய்ச்சிக்குழுவினரை விமானங்கள், வேண்டியவசதிகள் ஆகியவற்றோடு அந்த 'ஆராய்ச்சி ஆண்டில்' தெற்குமுனைக்கு அனுப்பிவைக்கத் தீர்மானித்திருக்கிறது. இந்த ஆராய்ச்சியின் முடிவு உலகிற்கு நல்ல பலனளிப்பதாக இருக்கும். தென் அமெரிக்கா தென் ஆப்பிரிக்கா ஆத்திரேலியா ஆகியபக்கங்களிலிருந்து ஆராய்ச்சிக் குழுவினர் தெற்கு முனையை அணுகுவார்கள் என்று தெரிகிறது.

அண்டார்டிகாவைப் பற்றி அறியப்படும் புதுமைகள், உலகின் வறட்சியைப் போக்கி வளத்தைப் பெருக்கவும், புதிய தேவைகளை உருவாக்கவும், புதிய அறிவியலறிவைப் பயக்கவும் பயன்படுவனவாக இருக்கும் என்று எதிர்பார்ப்போமாக!

சிற்றுண்டிச்சாலைக்குள் வேகமாக ஒருவன் ஓடிவந்து, "சீக்கிரமாக, இரண்டு இட்டிலி, ஒரு காபி தாருங்கள், பெரிய சச்சரவு மூளப்போகிறது. சீக்கிரம்!" என்று அவசரப்பட்டான்.

கடையில் வேலை பார்ப்பவன், பதறிப்போய் உடனே கேட்டவைகளைத் தந்தான். வந்தவன் உட்காரக்கூட நேரமின்றி சாப்பிட்டான்.

கடை முதலாளி, "எங்கே சச்சரவு? எப்பொழுது, எதற்காக ஆரம்பிக்கிறது." வெளியே பார்த்து பரபரப்புடன் கேட்டான்.

"இப்பொழுதுதான் ஆரம்பிக்கப்போகிறது. சாப்பிட்டதற்கான பணம் என்னிடம் இல்லை!"

"நீ உருப்படப் போவதில்லை!"

1938ஆம் ஆண்டில், நான் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தபோது, [பிறகு இடையில் படிப்பை நிறுத்திவிட்டு, மறு ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படிக்கச் சென்று விட்டேன்.] இந்தி எதிர்ப்பு இயக்கம் சென்னையிலும், பிற இடங்களிலும் மிகத் தீவிரமாகப் பணியாற்றிக் கொண்டிருந்தது. இந்தி எதிர்ப்பு மறியல் நாள்தோறும் நடைபெற்றுக் கொண்டிருந்தது. பலர் சிறையில் தள்ளப்பட்டிருந்தார்கள். சிலர் சிறைக்குள்ளே புகுந்து கொண்டிருந்தார்கள்; சிலர் சிறையிலிருந்து வெளியே வந்து கொண்டிருந்தார்கள். முக்கிய தலைவர்கள் வெளியே வரும்போது வரவேற்பும், ஊர்வலமும், பொதுக் கூட்டமும் நடைபெறுவது உண்டு.

ஒருநாள் சென்னை மத்திய சிறையிலிருந்து சில முக்கியமானவர்கள் வெளி வருகிறார்கள், அவர்களுக்கு ஐலண்டு திடலில் வரவேற்பு அளிக்கப்படும், பிறகு அவர்கள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவார்கள் என்ற செய்தியறிந்து நான் ஐலண்டு திடலுக்குச் சென்றிருந்தேன். சிறையிலிருந்து வெளிவந்தவர்களுக்கு மாலைகள் சூட்டி, அவர்களைக் கோச்சு வண்டியில் உட்காரவைத்து ஒலி முழக்கங்கள் எழுப்பி ஊர்வலமாகப் புறப்பட்டனர். 'தமிழ்-வாழ்க!', 'இந்தி-ஒழிக!', 'ஆச்சாரியார் ஆட்சி-ஒழிக!' என்பன போன்ற ஒலி முழக்கங்கள் விண்ணதிர எழும்பின. ஒருவர், எங்கேயோ நினைவாக "என். வி. நடராசன்" என்று சொல்லியபோது "ஒழிக" என்று குரலெழுப்பினார். பக்கத்தில் வந்துகொண்டிருந்த பலரும் சிரித்தார்கள். எல்லோரும் சிரிப்பதைப் பார்த்த பிறகுதான், அவர், தாம் தவறான ஒலி முழக்கத்தை எழுப்பிவிட்டோம் என்பதை உணர்ந்து, ஏமாந்த புன் சிரிப்பு சிரித்தார். அவர் யார் என்றால், அவர்தான் தோழர் என். வி. நடராசன்! அப்பொழுது நான் கூட்டத்தோடு கூட்டமாக வந்துகொண்டிருந்த பலரில் ஒருவனாகக் காட்சியளித்தேன். பிறகு 1944இல் சென்னையில் நடைப்பெற்ற சுயமரியாதை மாநாட்டின் போதுதான் முதன் முதலாக அவரும் நானும் அறிமுகப்படுத்திக் கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது.

தோழர் என். வி. நடராசன் அவர்களின் பொதுத்தொண்டின் பலன் காங்கிரசுக் கட்சி, தமிழர் இயக்கம், நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம், திராவிடக் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய அமைப்புகளுக்கு முறையே வளர்ச்சியையும், முற்போக்கான வரலாற்றையும் காட்டும் வகையில் பயன்பட்டு வந்திருக்கிறது. அவர் ஆர்வத்திற்கும், எழுச்சிக்கும் உண்மைப்பற்றுக்கும், நேரிய உழைப்பிற்கும், பொதுநலம் பேணும் தன்மைக்கும் செயலாற்றும் திறமைக்கும், சலியா முயற்சிக்கும், எளிமைப்போக்கிற்கும் எடுத்துக்காட்டாக என்றென்றும் விளங்கிவருகிறார். அவர் தொடர்புகொண்ட அவ்வளவு அமைப்புக்களிலும் அவற்றின் தலைவர்களால் மிகமிகப் போற்றிப் பாராட்டப்பட்டு அவர்களின் மிக நெருங்கிய நம்பிக்கைக்குகந்த ஒருவராகவே காட்சியளித்து வந்திருக்கிறார். அவரது நேரிய தொண்டுள்ளம் அவரை நாளுக்கு நாள் உயரிய நிலைமைக்கு உயர்த்திக் கொண்டு போகிறது.

அவர் காங்கிரசில் மிகத் தீவிரத்தொண்டராகப் பணியாற்றிய காலத்திலிருந்தே அறிஞர் அண்ணா அவர்களுக்கு மிக நெருங்கிய நண்பராக இருந்து வருபவராவார். அவர் அந்த நாட்களில் கட்சி என்னும் பேச்சு எழும்போது நெருப்பின் தன்மையோடும், நட்பு என்னும் பேச்சு எழும்போது தண்ணீரின் தன்மையோடுதான் அறிஞர் அண்ணா அவர்களை அணுகுவாராம். தோழர் நடராசன் அவர்களை கேலி-கிண்டல் சுழலிலே சிக்கிவைத்து மகிழுவது என்பது, அண்ணா அவர்களுக்கு அந்தக் காலத்திலிருந்தே அமைந்துவிட்ட வேடிக்கை விளையாட்டாகும்.

தோழர் என். வி. நடராசன் அவர்கள் கட்டாய இந்தித் திணிப்பை எதிர்த்துப் பேசிவிட்டு, காங்கிரசு உறுப்பினர் தகுதியையும் விட்டுவிட்டு, காங்கிரசுக் கூட்டத்தை விட்டு வெளியேறும்போது, கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய காலஞ்சென்ற தோழர் எஸ். சத்தியமூர்த்தி அவர்கள் "நீ உருப்படப் போவதில்லை!..." என்று சபித்தாராம்! அவரது வாக்கைத், தோழர் நடராசன் அவர்கள் இன்று பொய்யாக்கிக் காண்பித்துவிட்டார்கள். அவர் காங்கிரசிலேயே தொடர்ந்து இருந்திருந்தால், சத்தியமூர்த்திக் குழுவினர் உருப்படவிட்டிருப்பார்களா என்பது ஐயப்பாடே!

—இரா. நெ.

Regd. M 6296 MANRAM

வெளிவந்துவிட்டது!

இரா. செழியன் எம். ஏ.,
எழுதிய

மூன்று சிறு நாடகங்களின் தொகுப்பு.

"போராட்டம்"

விலை ரூ. 2-4-0

கிடைக்குமிடம்

பாரி நிலையம்

59, பிராட்வே :: சென்னை-1

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண்சங்கு சீயக்காய்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம்-ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர் :- வெண்சங்கு சீயக்காய்தூள் தொழிற்சாலை

3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

"மன்றம்" அச்சகத்தில் (26, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை-1)
ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகி.